Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28

விலை 30 ரூபா

சுடர் :35 கதிர் :14 கார்த்திகை 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 10 டிசெம்பர் 2019 வள்ளுவராண்டு 2050

முச்சந்தி முரளி



" உந்த ஏத்தம், இறக்கம், கூட்டு, உடைவு எல்லாம் தேர்தல் கால கூத்துத்தான் பாருங்கோ...!"

# கூட்டமைப்பை உடைக்கோம்!

## பங்காளிக் கட்சி தலைவர்கள் உறுதி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு செல்வது எமது நோக்கமல்ல. எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனப் பங்கீடு நியாயமானதாக– சரியானதாக அமையவேண்டும். அதனையே கூட்டமைப்பின் தலைவரி டம் நாம் வலியுறுத்தினோம். இவ்வாறு 25



## நேர்மைத் திறன் விருது

## 2ஆம் இடம் மருத்துவர் சத்தியமூர்த்தி

25

## குறைக்கப்பட்டது பால்மா விலை!

கொழும்பு, டிசெ. 10

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக் கான விலை குறைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நடைமு 25

## பௌத்த அடிப்படையை கட்டியெழுப்பி தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டும்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்க்கும் போது எமக்கு பௌத்த அடிப்படையி லான மத்திய 03

## 'படிச்ச இளம் ஆக்களுக்கே இம்முறை தேர்தல் வாய்ப்பு'

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பங்காளிகளுக்கு தெரிவித்தாராம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் படித்த இளையோருக்கு வாய்ப்பு வழங்கவுள்ளோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்துள்ளதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் அமைப்பின் உயர்மட்ட உறுப்பி னர்கள் கூட்டமைப் 25

## இரண்டரை மாத சிசு கொலை!

### துன்னாலையில் கொடூரம்; தாய் கைது



வடமராட்சி, டிசெ. 10

இரண்டரை மாத ஆண் சிசுவின் சடலம் வீட்டுக் கிணற்றிலிருந்து மீட் கப்பட்டது. அந்தக் 03

## தூதரக அதிகாரி கடத்தல் பின்னணியில் தமிழர்கள்

### இப்படிச் சொல்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, டிசெ. 10

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னணியில் புலம் 25

## ஐ.நா. செயலர் பதவிக்கு ரணிலின் பெயர் பரிந்துரை

### உறுதிப்படுத்தினார் அமரதுங்க

25

## கூடுகிறது கூட்டமைப்பு இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம், டிசெ. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் உயர் மட்ட உறுப் 25


## சுவிஸ் பணியாளரின் பயணத் தடை நீடிப்பு

### மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க மன்று பணிப்பு

கொழும்பு, டிசெ. 10

கொழும்பில் கடத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த நீதிமன்றத்தின் தடை உத்தரவு நாளை மறுதினம் வியாழக் கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு நேற்றுக் காலை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்தத் தடை உத்தர 25




விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்

கருத்தோவியம்; காண்டி

## ரூ. 15ஆயிரம் சம்பளம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

நிர்வாக சேவையில் உள்ள பணியாளர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் 15 ஆயிரம் 25

மகிந்தவுடன்

## தூதுவர்கள் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 10
பிரதமர் மகிந்த ராஜபக் சவை நேற்று பல்வேறு வெளிநாட்டுத்தூதுவர்கள் சந்தித்துக் கலந்துரையா டியுள்ளனர்.
இலங்கைக்கான ஆஸ்தி ரேலியத் தூதுவர் டேவிட் ஹொலி, மகிந்தவை நேற்றுப் பகல் அலரிமா ளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜ பக்சவுக்கு ஆஸ்திரேலி யத் பிரதமர் ஸ்கொட் மொரிஸனின் வாழ்த்துக் கடிதத்தையும் இலங் கைக்கான ஆஸ்திரேலி யத் தூதுவர் கையளித் தார். இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலா, உயர்கல்வி போன்ற துறைகள் பற்றிப் பேசப் பட்டன.
இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலி யாவுக்குள் குடிபெயரும் முயற்சிகளைத் தடுப்பதற் கான வழிமுறைகள் பற்றி யும் கவனம் செலுத்தப்பட் டது. இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ட்ரைன் ஜுவானி எஸ்கி டல், மகிந்தவை நேற்றுக் காலை அலரிமாளிகை யில் சந்தித்துப் பேசினார்.
இரு நாடுகளுக்கு இடை யிலான வர்த்தகம், மீன் ஏற்றுமதி தொடர்பில் கவ னம் செலுத்தப்பட்டுள் ளது. சந்திப்பின் நிறை வில் இரு தரப்பினரும் நினைவுச் சின்னங்க ளையும் பரிமாறிக் கொண்டனர். (ஓ.5,22)

ஜெனிவா

# பொறியில் சிக்க வைக்கும் முயற்சிகள்

பதறுகிறார் குணசேகர

கொழும்பு, டிசெ. 10
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையைச் சிக்கவைக்கும் பின்னணியாகவே சுவிஸ் தூதரகம் மற்றும் லண்டன் தூதரகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய் தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.
சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் பெண் இலங்கையைச் சேர்ந்தவர். எமது பாதுகாப்பு பிரிவுக்கு அவரிடம் வாக்கு மூலம் பெறுவதற்கு அதிகா ரம் இருக்கின்றது. இருந்தபோதும் அவரை தூதரகத்துக்குள் வைத் துக்கொண்டு கடந்த இரண்டு வாரங் களாக வாக்குமூலம் வழங்காமல் சாட்டு தெரிவித்து வந்தனர். என்றா லும் தற்போது அவர் வாக்குமூலம் வழங்கி இருக்கின்றார்.
ஆனால் லண்டன் தூதரகப் பணியி லிருந்த பிரிகேடியர் பிரியங்க பெர் ணான்டோ ராஜதந்திர அதிகாரம் பெற்றவர். அவருக்கு எதிராக வழக் குத் தொடர அந்த நாட்டு அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இருந் தபோதும் நாங்கள் இரு நாடுகளின் உறவில் விரிசல்கள் ஏற்படாதவகை யில் எமது நாட்டின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் வெளி விவகார அமைச்சு செயற்பட்டு வரு கின்றது - என்றார். (ஓ.5)

ஊடகவியலாளர்கள் மீது

# தாக்குதல்கள்!

விசாரணை கோருகிறது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு, டிசெ. 10
சில தினங்களுக்குள் ஊடகவியலாளர்கள் தமது தொழில் காரண மாக பல்வேறு ஒடுக்குமு றைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றனர் என்று சுதந் திர ஊடக இயக்கம் தெரி வித்துள்ளது. கடும் கண் டனத்தையும் அது தெரி வித்துள்ளது.
அளுத்கமை பிரதேச ஊடகவியலாளர் துசித குமார டி சில்வா மற்றும் அவருடைய மனை வியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக் குதல் சம்பவங்கள் தொடர்பில் தாம் அறிந் துள்ளோம் என்றும் இயக் கம் தெரிவித்துள்ளது.
சுதந்திர ஊடக இயக்கம் அனுப்பிய செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:
அளுத்கமையில் செய ற்கை மதுபான உற்பத்தி மேற்கொள்ளும் சில இடங்களைப் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையி னர் சோதனையிட்டு சந் தேக நபர்களைக் கைது செய்திருந்தனர். அவர் கள் மேலதிக விசார ணைக்காக அளுத்கமை பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டனர்.
இந்தச் செய்தியை தாம் பணியாற்றும்ஊடகத்தில் அறிக்கையிட்டேன் என் றும் அந்தச் செய்தியின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட குழுவொன் றின் மூலமே தானும் மனைவியும் தாக்கப்பட் டோம் என்றும் ஊடகவிய லாளர் துசித குமார எமக் குத் தெரிவித்தார்.
தமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் குறித்த அறிக்கையிடலுக்கு பதில் வழங்குவதாகத் தாக்கு தல் நடத்தியவர்கள் இதற்கு முன்னரும் அச்சு றுத்தல் மேற்கொண்டி ருந்தனர் என்று பாதிக்கப் பட்ட ஊடகவியலாளர் தெரிவித்தார். அவரு டைய கூற்றுக்கேற்ப இந் தத் தாக்குதல் சம்பவத் தில் அவ்வாறான அரசி யல் பழிவாங்கலொன்று இருப்பின் அதை ஜனநா யகத்தின் மீது மேற்கொள் ளப்பட்ட பெரும் அச்சுறுத் தலாகவே சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.
தொழில்சார் ஊடகவிய லாளர் ஒருவரை இழி வாக நடத்தும் இவ்வா றான நடவடிக்கைகள் ஜனநாயகத்தின் இருப் புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் சுதந் திர ஊடக இயக்கம் கருது கின்றது. இந்தச் சம்ப வத்தை சாதாரணமாகக் கருதாமல் நீதியான முறையில் விசாரணை களை நடத்தி சந்தேகநபர் களை நீதியின் முன் நிறுத்தும்படி உரிய அதி காரிகளிடம் சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக் கொள்கின்றது - என்றுள் ளது. (கு)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

முல்லைத்தீவு, டிசெ. 10
முல்லைத்தீவு மாவட்டத் தின் அபிவிருத்திக்குழு தலைவராக வன்னிமா வட்ட முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஜனாதி பதியால் நியமிக்கப்பட்டு ள்ளதை தொடர்ந்து எதிர் வரும் 16ஆம் திகதி முல் லைத்தீவு மாவட்ட அபி விருத்திக்குழு கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5,ரி3)

## மல்லாவியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
வடக்கு மாகாண மருத்துவ மன்றத்தின் ஏற்பாட்டில் சிறப்பு மருத்துவ முகாம் மல்லாவி ஆதார மருத்துவம னையில் நாளை இடம்பெறவுள்ளது.
பொது மருத்துவ நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர், மகப்பேற்று நிபுணர், கண் சத்திரசிகிச்சை நிபுணர், தோல் மருத்துவ நிபுணர் என பல மருத்துவ நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்ட மக்களை கலந்து பயன்பெறு மாறு வடக்கு மாகாண மருத்துவ மன்றத்தின் செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ.5)

விமான நிலையத்தில்

## வி.ஐ.பி. வாசலை பயன்படுத்த கட்டணம்

கொழும்பு, டிசெ. 10
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட விருந்தினர்கள் வந்துசெல்லும் வி.ஐ.பி. வாசலைப் பயன்படுத்து வது தொடர்பாடு விசேட கட்டுப்பாடு விதிக்கப்பட் டுள்ளது.
உள்ளூர் அரசியல்வாதி கள் இனி சாதாரண பய ணிகள் செல்லும் வழி யில் சென்றுவரவேண்டு மென்றும், வி.ஐ.பி. வாசலை பயன்படுத்த விரும்புவோர் தேவைப் டின் ஆயிரம் டொலரை செலுத்தி அதனூடாக செல்லலாமென தெரி விக்கப்படுகிறது. எவ்வா றாயினும் வெளிநாட்டில் இருந்து வரும் முக்கிய அதிதிகள் மற்றும் இராஜ தந்திரிகள் விமான நிலைய விசேட பிரமுகர்க ளுக்கான வாசல் ஊடாக வந்துசெல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இந்தியாவுக்கான பய ணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, சாதாரண பிர முகர்கள் பயன்படுத்தும் வாயிலூடாகவே சென்று வந்தமை குறிப்பிடத்தக் கது. (ஓ.5)

## இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 10
இராஜாங்க அமைச்சுக ளுக்கான செயலர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவால் நேற்று நிய மிக்கப்பட்டனர் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இதில் தமிழ் பேசும் மூவரும் அடங்குகின்றனர்.
முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலராக சுந்தரம் அரு மைநாயகமும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சின் செயலராக திருமதி ரமேஷ்; விஜய லக்சுமி மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சின் செயலராக எம்.ஐ.அமீர் ஆகியோர் தமிழ் பேசுப வர்களாக நியமிக்கப்பட்டு ள்ளனர்.
இராஜாங்க அமைச்சின் செயலர்கள் நியமனத்தி லும் மூத்த தமிழ் அதிகா ரியும் மீள்குடியேற்ற அமைச்சின் முன்னாள் செயலருமான சிவஞான சோதிக்கு இராஜாங்க அமைச்சின் செயலர் பத வியும் வழங்கப்பட வில்லை. இடைக்கால அரசில் இராஜாங்க அமைச்சர்களாக 38 பேர் நியமிக்கப்பட்ட நிலையில் இராஜாங்க அமைச்சுகளுக்கு செய லர்களை நியமிப்பத ற்கான அனுமதியைப் பெற ஜனாதிபதி கோத்த பாய ராஜபக்ச கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவையில் பத்தி ரத்தை முன்வைத்தார். அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந் தது. இந்த நிலையில் 32 இராஜாங்க அமைச்சுக ளுக்கு செயலர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். (ஓ.5)

## பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 10
உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகி லுள்ள வீட்டின் மீது நேற்று இரவு பெற்றோல் குண்டுகள் இரண்டு வீசப்பட்டுள்ளன. வீட் டின் யன்னல் கண்ணா டிகள் உடைந்தன. வீட்டி லிருந்தவர்களுக்கு எந் தப் பாதிப்பும் ஏற்பட வில்லை.
மோட்டார் சைக்கிள்க ளில் வந்தவர்கள் இந் தத் தாக்குதலை நடத்தி யுள்ளனர். முதலாவது தாக்குதல் மேற்கொள் ளப்பட்டபோதும் வீட்டிலிருந் தவர்கள் வெளியே ஓடி வந்துள்ளனர். இரண்டா வது குண்டையும் வீசி விட்டு தப்பிச் சென்றுள் ளனர். (ஓ.5,105)

## வழக்கு தள்ளுபடி

வடமராட்சி, டிசெ. 10
முல்லைத்தீவு மாவட் டகடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத் துக்குச் சேதம் ஏற்படுத் தியமை தொடர்பில் வட மாகாண சபை முன்னாள் உறுப்பி னர் துரைராசா ரவிக ரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு விசாரணை கள் முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்றில் இடம்பெற்றுவந்த நிலையில், வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (ஓ.5,246)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 816
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.09
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 71,903,750/-
வெற்றி இலக்கங்கள்
03 12 35 64
ஆங்கில எழுத்து
R
தொலைபேசி: 0112 333 546-47
தொலைபேசி முறைப்பாடு: 0114 825 825

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3272
திகதி: 2019.12.09
நீலம்
திங்கட்கிழமை
சுப்பிரி தவாஸ்
விசேட இலக்கம்
9981
வெற்றி இலக்கங்கள்
03 13 22 38
ஆங்கில எழுத்து
I
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
31,713,490/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி
09.12.2019
வெற்றி வாரம்
2702
வர்ணம்
மஞ்சள்
தனுசு
வெற்றி இலக்கங்கள்
05 31 33 37
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4, 544, 146/=
10.12.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை ......சிவப்பு...... நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1088
சீட்டிழுப்பு திகதி 2019.12.08
ஞாயிற்றுக்கிழமை
I 13 27 51 75
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6. மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

கோடிபதி கப்றக
சீட்டிழுப்பு வாரம்: 530
திகதி: 2019 டிசம்பர் 08
வர்ணம்: மஞ்சள்
ஞாயிறு
J 08 21 47 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,525,660/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.


## சிலந்தி பற்றி சில தகவல்கள்

உழைப்பு என்று சொன்னால் எறும்பையும் முயற்சி என்று சொன்னால் சிலந்தியையும் தான் உதாரணமாக சொல்வார்கள். சிலந்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது அதன் வலைதான். இந்த வலைதான் சிலந்தி வாழ்வதற்கான இருப்பிடமாக உள்ளது. சிலந்தியின் வாயிலிருந்து வரும் எச்சிலைக் கொண்டு இந்த வலை பின்னப்படுகிறது. இந்த வலையில் வந்து விழும் பூச்சிகளை இரையாக்கிக் கொண்டே சிலந்தி வாழ்கிறது. வலையின் ஆயுட்காலம் முடிந்து அது பழையதாகும்போது அந்த வலையை விட்டு விட்டு வேறொரு வலையைப் பின்னத் தொடங்குகிறது சிலந்தி. பூச்சி இனத்தைச் சேர்ந்த சிலந்தியில் கோடு போட்ட சிலந்தி என்றும், சிறிய சிலந்தி என்றும் பல வகைகள் உள்ளன.

ஆர்ப் வீவர் என்ற கோடு போட்ட ஒரு வகை சிறிய சிலந்திகள் கூட்டமாக சேர்ந்து கூடு கட்டுகின்றன.

இந்த வகை சிலந்திகள் ஆபிரிக்காவிலுள்ள பெரும் காடுகளில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. அளவில் சிறியதாக இருந்தாலும் காடுகளில் இரண்டு மரங்களை இணைப்பது போன்று, கிளைகளை இணைத்து பல மீட்டர் நீளம் கொண்ட வலையைப் பின்னும். இந்த சிலந்தியின் வலை எளிதில் அழிந்துபோகாது. மழை, காற்று மற்றும் விலங்குகளாலும் சேதம் ஏற்பட்டுவிட்டால், உடனடியாக பல சிலந்திகள் கூட்டாகச் சென்று வேலை செய்து வலையை சரிசெய்கின்றன. வலையில் வந்து விழும் உணவை எல்லா சிலந்திகளும் பகிர்ந்து உண்ணும். பெண் சிலந்திகள் வேட்டையாடுவது மற்றும் வலையில் உள்ள சிலந்திக ளின் பாதுகாப்பில் கவனம் செலுத்திவரும்.

## பௌத்த...

வர்க்கத்தினதும், இளைய சமுதாயத்தினதும் வாக்குகள் கிடைக்கவில்லை. இது குறித்து மாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி எமது அடுத்தகட்ட செயற்திட்டங்களைத் தயாரிக்கவேண்டும். இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது எமது குறைபாடுகள் என்னவென்பதை அறிந்துகொண்டு முன்நோக்கிப் பயணிக்க வேண்டுமே தவிர ஒருவரோடு ஒருவர் வாக்குவாதம் செய்வதில் எவ்வித பயனுமில்லை. தோல்விகளால் துவண்டு கொண்டிருக்காமல் முன்னோக்கிச் செல்லவேண்டும். பொதுத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிறிகொத்தாவில் ஆதரவாளர்களை நேற்றுச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ,5)

## சிசு...

குழந்தையை கிணற்றில் வீசிக் கொலை செய்ததாக தாயார் இறப்பு விசாரணையின் போது கூறியுள்ளார். சந்தேகத்தில் தாயாரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துன்னாலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வறுமை நிலையிலுள்ள இந்தக் குடும்பத்தில் உயிரிழந்த அஸ்ரின் என்ற இரண்டரை மாத சிசு, இரண்டாது பிள்ளை. தந்தை கூலி வேலை செய்கின்றார். இரவு தங்கி நின்று தொழில் செய்வது வழமை. தாயாருடன் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர்.

'கையில் யாரோ மிதிப்பதைப் போன்று இருந்தது. எழுந்து பார்த்தேன். மழை அங்கியுடன் முகத்தை மூடியபடி இருவர் ஓடினர். என் அருகில் இருந்த குழந்தையையும் காணவில்லை' என்று தாயார் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

குழந்தையைக் காணவில்லை என்ற தாயாரின் அலறல் கேட்டு அயலவர்கள் வந்ததாகவும் அவர்கள் தேடியபோது கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். 'குழந்தையின் கையில் பித்தளை காப்பு இருந்தது. அதைக் காணவில்லை' என்று சடலம் மீட்கப்பட்ட போது தாயார் கூறியதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். சிசுவின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று மாலை இடம்பெற்றது. இதன் பின்னர் திடீர் இறப்பு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. சிசுவை கிணற்றில் வீசியதாக தாயார் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

(ஒ,5,21,26)


CELEBRATING OUR 33 YEAR ANNIVERSARY
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
இலங்கையில் முதல் தடவையாக
33%
போனஸ் வட்டி கிடைக்கும்
வெளிநாட்டு நாணய சேமிப்பு
இலங்கை வங்கி வரலாற்றில் முதன்முறையாக உங்கள் அ.டொலர் கணக்கின் வட்டிக்கு, மேலதிகமாக 33% போனஸ் வட்டியினை வழங்குகிறது, Sampath FC Prime வெளிநாட்டு நாணய கணக்குகள்.
A.E.R. 4.05%
Sampath FC PRIME
வெளிநாட்டு நாணய கணக்குகள்
www.sampath.lk 0112 30 30 50
Sampath Bank Fitch Ratings A+(lka)
DentsuGrant


# உலகளவில் சாதனை படைத்த 'ரவுடி பேபி' பாடல்



தனுஷின் 'மாரி - 2' படத்தில் இடம்பெற்ற 'ரவுடி பேபி' பாடல் 'யூடியூபில்' அதிகம் பார்க்கப்பட்ட வீடியோப் பாடல் என்ற சாதனையைப் படைத்துள்ளது.
உலகளவில் 7ஆம் இடத்தையும் இந்திய அளவில் முதல் இடத்தையும் 'ரவுடி பேபி' பாடல் பிடித்துள்ளது.
பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் மற்றும் சாய் பல்லவி, வரலட்சுமி நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான படம் மாரி2. இந்தப் படத்தில் இடம்பெற்ற 'ரவுடி பேபி' பாடல் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப்பெற்றது. இந்தப் பாடல் யூடியூப் தளத்தில் 71.5 கோடி பார்வையாளர்களைக் கடந்துள்ளது . தற்போது சர்வதேச 'யூடியூப்' பட்டியலில் உலக அளவில் 2019ஆம் ஆண்டு அதிகம் பார்க்கப்பட்ட பாடல் காட்சிகள் பட்டியலில் ரவுடி பேபி 7ஆவது இடத்தை பிடித்துள்ளது. மேலும் யூடியூப் நிறுவனம் இந்திய அளவில் 2019ஆம் ஆண்டு அதிகம் பார்க்கப்பட்ட பாடல் காட்சிகள் பட்டியலில் 'ரவுடி பேபி' பாடல் முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பதை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

## தெளிவு

தெருவில் செல்போனை பார்த்துக்
கொண்டு நடந்தவனை பக்கவாட்டில் யாரோ
மோதியதில் தடுமாறி கீழே விழுந்தான்,
கோபத்தில் "அறிவில்லையா? மாடு மாதிரி
மேலமோதுற" எனத் திட்டியபடி நிமிர்ந்து
பார்த்தான்.
அங்கே உண்மையில்
மாடுதான் நின்றிருந்தது.



## twitter

சிலந்தி™
@nandhu_twitts
பெண்களை பொறுத்தவரை
நகம் ஓர் அழகியல்..
அதே நேரம் கூரிய
ஆயுதமும் கூட..!!

கோழியின் கிறுக்கல்!!
@Kozhiyaar
அறிவை பிழைப்புக்காக
பயன்படுத்த தொடங்கும்
புள்ளியில், அடிமைகளாய்
வாழப் பழகிக்
கொள்கிறோம்!!



உருவம் சிறிதாக
இருப்பினும் முயற்சி
யும் தன்னம்பிக்கையும்
பெரிதாக உணரப்படல்
அவசியம்.

செந்திலின்_கிறுக்கல்கள்
@Annaiinpillai
பேரன் பேத்தி வீட்டில் இல்லாத சமயத்தில்
ரிமோட்டைத் தேடி கண்டுபிடிக்கும்
முயற்சியில் தாத்தாவின் மனத்துக்குள்
பால்யம் பிறக்கிறது...!

### நண்பனே...!

தொடங்கு முன்
தயங்காதே
தொடங்கிய பின்
நடுங்காதே
இடையில் நீ
உறங்காதே
வேதனை கண்டு
பதுங்காதே
சோதனை வரும்
துவளாதே!









## சிரிப்பு

யாழ்ப்பாணத்லிருந்து வவுனியாவுக்கு சென்று கொண்டிருந்தது அந்த பஸ். பளை அருகில் வந்த போது வயதான அம்மா ஒருவர் எழுந்து நடத்துநரிடம், "கிளிநொச்சி வந்திட்டா?" என்று கேட்டார்.
"கிளிநொச்சியா? அதுக்கு இன்னும் ரொம்ப தூரம் இருக்கும்மா"
"சரி"
ஆனையிறவு வந்தது.
"தம்பி.. கிளிநொச்சி வந்திடுச்சா?"
"அட.. இன்னும் இல்லையணை அம்மா"
அம்மா மீண்டும், கிளிநொச்சி வந்திடுச்சா?"
"ஐயோ அம்மா.. உன்ர இம்சை தாங்க முடியல எணை..... பேசாம கண்ணை மூடிட்டு தூங்கும்மா. கிளிநொச்சி வந்தா நானே சொல்றேன்"
"சரி"
அந்தம்மா கண்களை மூடித் தூங்கலானார்.
பஸ் மாங்குளத்தை தாண்டிக் கொண்டிருந்தது.
"கண்டக்டர் தம்பி .... கிளிநொச்சி வந்திடுச்சா?" தூங்கி எழுந்த அந்தம்மா கேட்டார். நடத்துநருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஐயையோ.. நான் மறந்திட்டேனே. நீ ஏனம்மா தூங்கின?" பழியை அந்தம்மா மீது தூக்கிப் போட்டார் நடத்துநர். பஸ்ஸில் இருந்த அத்தனை பேரின் கோபமும் அவரின் மீது திரும்பியது. "பாவம் அந்தம்மா.. வண்டியைத் திருப்புப்பா.. திரும்ப கிளிநொச்சிலையே கொண்டு போய் அந்தம்மாவை விட்டுட்டு திரும்பி வருவம்" என்றார்கள். அவருக்கு வேறு வழி தெரியவில்லை. பஸ்ஸைத் திருப்பினார். வந்த வழியே கிளிநொச்சிக்குச் சென்றது.
ஒரு வழியாக சில மணி நேரங்களில் கிளிநொச்சி வந்தது. "அம்மா.. இறங்கணை" சலித்தபடியே நடத்துநர் கூறினார்.
சாவகாசமாக எழுந்த அந்தம்மா மேலே இருந்து பையை எடுத்துப் பிரித்து அதிலிருந்து பிரஷர் குளிசையை எடுத்துப் போட்டு முழுங்கி தண்ணீர் குடித்து திரும்ப அமர்ந்து தூக்கத்தைத் தொடர்ந்தார்.
"என்னம்மா......கிளிநொச்சியில இறங்கலையா?" எனக் கேட்டார்.
"நான் ஏன்டா தம்பி கிளிநொச்சில இறங்கணும்........?? கிளிநொச்சி வந்தவுடனே பிரஷர் மாத்திரை மறந்திடாம போட்டுன்னு என்ர மகன் சொல்லி அனுப்பினான். அதான். நான் வவுனியா போகணும். கெதியா எடப்பா பஸ்ஸை" என்றார் அந்த வயதான அம்மா.
இப்போது நடத்துநருக்கு 'பிரஷர்' படு பயங்கரமாக ஏறத் தொடங்கியதது.

# கடவுளின் கருணை



கோட்டையூர் என்ற ஊரில் அருணாச்சலம் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் மிகுந்த கடவுள் பக்தி கொண்டவன். வாழ்க்கையில் இன்பமோ துன்பமோ எது நடந்தாலும் எல்லாம் கடவுள் செயல் என்று சொல்வான்.

இதனால் எதை பற்றியும் கவலைப்படமாட்டான். இறைவன் அருள் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பது இவனுடைய கொள்கை. அதே ஊரில் தங்கையா என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் அருணாச்சலத்திற்கு நேர் எதிர்.

கடவுளே இல்லை என்று சொல்லும் கொள்கையுடையவன். வசதிக்கு குறைவில்லை. எனவே, அருணாச்சலத்தை பார்க்கும் போதெல்லாம் கிண்டல் செய்வான். காரணம் அருணாச்சலம் ஏழை. அதனால் அவனது கிண்டலுக்கு கேட்கவேண்டுமா?

நீ நம்பி இருக்கிற கடவுள் உன்னை மட்டும் ஏழையாக வைத்துவிட்டு என்னை மட்டும் பணக்காரனாக படைத்திருக்கிறான் பார்த்தாயா? இப்படியெல்லாம் பேசி நக்கல் செய்வான்.

அதற்கு அருணாச்சலம் எல்லாத்துக்கும் ஒரு காரணம் இருக்கும். அதை இறைவனை தவிர யார் அறிய முடியும் என்று சொல்வான். இப்படியாக தங்கையா கிண்டல் செய்வதும் அருணாச்சலம் பதில் சொல்வதுமாக இருந்தான்.

ஒரு நாள் உச்சி வெயில் மண்டையை பிளந்தது. அப்போது அந்த வழியாக குடை பிடித்து கொண்டு வந்து கொண்டிருந்தான் தங்கையா. குடை வாங்க வசதியில்லாத அருணாச்சலம் வெயிலில் வேர்வை வழிந்தோட வந்து கொண்டிருந்தான். அவனை கண்டதும் அருணாச்சலத்துக்கு ஏக குஷி.

வழக்கம் போல் அருணாச்சலத்தை வம்புக்கு இழுத்தான். "என்ன அருணாச்சலம் வெயிலில் வேர்க்க விறுவிறுக்க எங்க போயிட்டு வாற? எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லும் உனக்கு ஒரு குடை கொடுக்க வேண்டும் என்று அந்த கடவுளுக்கு தெரியாதா! என்னய்யா சாமி? என்று நக்கல் செய்தான்.

வெயில் கொடுமை ஒரு பக்கம் அவனது தொடர் தொல்லை ஒரு பக்கம் சேர்ந்து கொண்டு அருணாச்சலத்தை எரிச்சல் படுத்தியது.

"அந்த கடவுளின் கருணை இல்லையென்றால் உன் கையில் குடை இருந்தாலும் நீ அதை பிடித்துச் செல்ல முடியாது. அதைக் கையில் வைத்து கொண்டு தலை காய ஓடுவாய் என்பதை மட்டும் மறந்துவிடாதே. இறைவனது கருணையை எப்போதும் கிண்டல் செய்யாதே, என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.


பெரிய தத்துவம் சொல்கிறான் என்று சிரித்துக் கொண்டே நடந்தான் தங்கையா. சிறிது தூரம் கூட நடந்திருக்கமாட்டான் அதற்குள் வெறி நாய் ஒன்று அவனைத் துரத்த ஆரம்பித்தது. உயிர் பயத்தில் ஓட்டம் பிடித்தான் தங்கையா. நாயோ விடாமல் துரத்தியது.

குடையைப் பிடித்துக் கொண்டு ஓடுவதற்கு சிரமமாக இருந்தது. எனவே, குடையை மடக்கி கையில் வைத்துக் கொண்டு ஓட்டமாக ஓடி உயிர் தப்பிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

அப்பொழுதுதான் அவன் மனதில் அருணாச்சலம் சொல்லிவிட்டு சென்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

கடவுளின் கருணை இல்லாவிட்டால் கையில் குடை இருந்தாலும் பிடிக்கமுடியாது என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து கடவுளின் அருளை நம்ப ஆரம்பித்தான் தங்கையா.


முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
10.12.2019



சிரேஷ்ட புதல்வன்
செல்வன் யுவான் பம்பினோ பெர்னான்டோ
யூட் லெயோன் குயின்ஸ்சி
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
**செல்வன் யுவான் பம்பினோ பெர்னான்டோ**
இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை தனது முத்தான
முதலாவது பிறந்த தினத்தை நிறைவான இறை ஆசியுடன்
தனது இல்லத்தில் குதுகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா,
ஆசை அக்கா ஜொனினா, தொட்டப்பா, தொட்டம்மா, அப்பம்மா, அம்மம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்
அனைவரும் குழந்தை இயேசுவின் அருள்பெற்று எத்துறையும் சிறந்து சீரும்
சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.
அத்துடன் அப்பப்பா, அம்மப்பாவின் ஆசீர்வாதங்கள்
நிறைவாகக் கிடைக்கக் கடவது.
பிறந்தநாள் வாழ்த்துக்கள் " பம்பி " குட்டி
இல.15, அடப்பன் வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
திரு திருமதி. யூட்லெயோன்


## வேலணை பிரதேச சபை
## 2020 ம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக மீள்கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 10.12.2019 முதல் 23.12.2019 மதியம் 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 24.12.2019 பி.ப 1.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 24.12.2019 பி. ப. 2.00 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | 2020 ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | | 2000 | 5000 | 12,870.00 |
| சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும், சிற்றுண்டிச்சாலையும் | | | | | |
| 2 | சாட்டி வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் (படகு சேவை தவிர்த்து) | ------------ | 2000 | 10000 | 310,000.00 |
| வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச்சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | | |
| 3 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | | 2000 | 10,000 | 200,000.00 |
| 4 | கடைஇல-2 | 1000 | 2000 | 5000 | 28,800.00 |
| 5 | கடைஇல-4 | 1000 | 2000 | 5000 | 31,600.00 |
| வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | | | |
| 6 | மரக்கறி,மீன் | | 2000 | 5,000 | 27,000.00 |
| 7 | சிற்றுண்டிச்சாலை | 750 | 2000 | 5,000 | 25,100.00 |
| புங்குடுதீவு முற்றவெளிச்சந்தையும் கடைத்தொகுதியும் | | | | | |
| 8 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 2000 | 5000 | 13,600.00 |
| 9 | கடைஇல-6 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 10 | கடை இல-7 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 11 | புங்குடுதீவு முற்றவெளி மீன், மரக்கறி சந்தை | ------ | 2000 | 5000 | 30,500.00 |
| 12 | புங்குடுதீவு மடத்து வெளிமீன் சந்தை | ------- | 2000 | 10000 | 277,500.00 |
| 13 | புங்குடுதீவு மடத்து வெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | | 2000 | 5000 | 13,600.00 |

இவற்றுக்கான நிபந்தனைகள் தொடர்பாக 18-11-2019ஆம் திகதி வெளிவந்த உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும். இது தொடர்பாக மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

தவிசாளர்
பிரதேச சபை
வேலணை.

திகதி :- 2019.12.10


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
30 . 09 . 1999



இறப்பு
21 . 11 . 2018

**செல்வி சாரு மாணிக்கவாசகர்**
*திதி :திரயோதசி (10.12.2019)*

*எங்கள் குலவிளக்காய் உதித்த நீ*
*எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா ?*
*என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ....*
*பத்தொன்பது வருடம் எம்முடன் வாழ்வதற்கா ,*
*எமைப் பிரிந்து நீ சென்று ஓராண்டு ஆனாலும்*
*என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய் !*


இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அராலி தெற்கு,
நாச்சிமார் கோயிலடி,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

(CS 24202) (14,17)




அருகே உள்ள கட்டங்களில் நான்கு விலங்குகளின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் கால்கள் தனியே தரப்பட்டுள்ளன. விலங்குகளையும் அவற்றின் கால்களையும் பொருத்துங்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி யோசேப்பின் பாலர் சின்னப்பு (சின்னத்தங்கம்)



பலாலி, கே.கே.எஸ் .வீதியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி யோசேப்பின் (சின்னத்தங்கம்) பாலர் சின்னப்பு நேற்று **(09.12.2019)** திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஈசாக் அன்னம்மாள் தம்பதியினரின் அன்பு 'மகளும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பாலர் சின்னப்புவின் மனைவியும் ஆனந்தியின் அன்பு தாயாரும் சேவியரின் (கொத்தலா) அன்பு மாமியாரும் லிசி லேவிதா, ஜனுஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை மாலை **3.30** மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS29833(16/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### மகாலிங்கம் வின்சன் குலமகன்

அல்வாய் வட மேற்கை பிறப்பிடமாகவும், ஹம்பேர்க் - ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் வின்சன் குலமகன் நேற்று (09.12.2019) ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிச்சடங்கு பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**தகவல்**
**ம.வின்சன் குணாளன்**
**(இளைப்பாறிய நூலகர் - பண்டத்தரிப்பு)**
**ம.வின்சன் கோமகன்**
**(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் - அல்வாய்)**
**(சகோதரர்கள்)**

### சிட்டு குருவி

சின்னச் சின்ன
சிட்டுக் குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண
சாம்பல் நிறத்தில்
வனப்பாய்வானில்
பறக்கும் குருவி!

கொட்டிக் கிடக்கும்
தானியக் குவியலை
கூடி வந்து கூடி
நின்று
தொட்டு தொட்டு
கொத்தித் தின்று
கூடி பறந்து
கூடு செல்லும்!

ஒன்றாய் வராமல்
ஒன்றோடொன்று
சேர்ந்து வரும்
சிட்டுக் குருவி
நன்றாய் செப்பும்
பாடம்செவியுறுவீர்
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை!

## சிவகுரு சிவபாதம்

**(இ.போ.ச. முன்னாள் பரிசோதகர்)**



கெருடாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பொன்னுச்சாமி வீதி பெரிய மாவடி சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சிவபாதம் நேற்று (09.12.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவ்குரு அன்னமுத்து தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சௌந்தரியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் புலேந்திரலிங்கம், சண்முகம், காலஞ்சென்றவர்களான தியாகராசா, அருளம்மா மற்றும் அரசம்மா காலஞ்சென்றவர்களான திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா, வ. பாலசுந்தரம், வ.தியாகராசா மற்றும் வ.நவரத்தினம் (இந்தியா), திருமதி குகனேஸ்வரி, சிதம்பர நாதன் (கனடா), வ. தேவராஜா (கல்வயல்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பொன்னுச்சாமி வீதி,
பெரியமாவடி, கந்தசாமி கோவிலடி

தகவல்:
வ.தேவராஜா 077 696 4289
சு.புலேந்திரலிங்கம் (காப்டர்)077 757 0510

## மரண அறிவித்தல்

### வைரவன் சின்னத்துரை (செல்லக்கண்டு)

**(பிரபல திருநெல்வேலி சந்தை வியாபாரி)**



திருநெல்வேலி வடக்கு இல.**65**, கலாசாலை வீதி, பாரதிபுரத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் சின்னத்துரை (செல்லக்கண்டு, பிரபல திருநெல்வேலி சந்தை வியாபாரி) கடந்த **(08.12.2019)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு, நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, சரஸ்வதி மற்றும் சோதிமலர், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான குருநாதன், மனோன்மணி மற்றும் சிவலிங்கம், முத்துலிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதாமதி, வளர்மதி, விஜயமதன் (சுவிஸ்), ஜெகமதன், ஜெயமதி (பிரதேச செயலகம், கரைச்சி, கிளிநொச்சி), ராஜ்மதன் ஆகியோரின் அன்பு தந்தையும் பாலகுமாரன், ரதீஸ்வரன், சுபாஷினி, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரோதிகா, ஜென்சிகா, கம்ஷன், தக்ஷயன், ஜனுஷன், ஹரினிகா, திருக்ஷான், விஷானி, சஞ்சயன், திலக்ஷி, பவிஷயன் ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை பிற்பகல் **3.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பால்பண்ணை, திருநெல்வேலி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS24203(16/17)

**தகவல்:குடும்பத்தினர்**

# நாடாளுமன்ற குழுக் கூட்டம்

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி கோத்தபாய மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அரசின் முதலாவது நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

புதிய அரசின் முதல் நாடாளுமன்றக் குழு கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும் என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(ஒ.5)


## தவறி விட்டது

பலாலி வீதியில் உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத் திற்கும் இடையில் 06.12.2019 ஆம் திகதி பாலசிங்கம் ஜெகதீஸ்வரன் NIC 741534843V வாகன அனுமதிப் பத்திரம், ஆள்அடையாள அட்டை வாகன காப்புறுதி, வாகன அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு - 077 949 5088

## பணியாளர்கள் தேவை

கையடக்கத்தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர், கணக்காளர், சிட்டை எழுதுனர் தேவை.

தொடர்பு - 077 361 1282

## காணாவில்லை



டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி பி.ப. 2.00 மணியளவிலிருந்து "A9" வீதி ராஜ் ஹொட்டேல் பரந்தனில் தங்கியிருந்த எனது தந்தையாகிய **ராஜன் செல்வராஜா பொன்னம்பலம்** (பிளாக்கர் பொன்னம் பலத்தின் மூத்தமகன்) என்பவரை காணவில்லை. இவரைக்கண்டவர்கள்,

தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புக்கு:**
**அன்ரன் மோகன்ராஜ் செல்வராஜா பொன்னம்பலம்.**
**077 664 4074**

## காணி, வீடு விற்பனைக்கு

மட்டுவில் முத்துமாரி அம்மன் வீதியில் அமைந்துள்ள வீடு, பயன்தரு மரங்களுடன் 28 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (AC/431) (11,17)

077 365 0757,
+1647 625 5557


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான
## மீள்கேள்வி அறிவித்தல் - 2020 (01.01.2020 - 31.12.2020)

மாநகர சபையினால் **08.11.2019** ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2020 - 31.12.2020 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - **ரூபா 500.00 (வரி நீங்கலாக)**
கேள்விப் படிவம் விநியோகித்தல் - **10.12.2019 – 19.12.2019** (மு.ப. 9.00- பி.ப.3.00 மணிவரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - **19.12.2019 பி.ப. 3.30 மணிவரை**
கேள்விதிறத்தல் - **20.12.2019 மு.ப. 10.00 மணிக்கு**

**நிபந்தனைகள் :**

1. 2020 ஆம் ஆண்டுக்கான கேள்வியில் சித்திபெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்திபெறினும் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

**இறைச்சிக்கடை குத்தகை - 2020**

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 201,757.50 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 64,496.25 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 230,202.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 90,515.25 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 885,087.00 |
| 6 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 101,904.08 |
| 7 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 347,287.50 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 874,337.63 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 336,372.75 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 277,664.63 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 396,900.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 352,800.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 248,172.75 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 248,062.50 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 220,665.38 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 245,085.75 |
| 17 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 382,567.50 |
| 18 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 65,885.40 |
| 19 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,725.60 |
| 20 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 79,490.25 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 618,734.03 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,339.38 |
| 23 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 584,997.53 |
| 24 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 450,481.50 |

**பொதுச் சந்தைக் குத்தகை 2020**

| தொ. இல | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்க கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 356,107.50 |
| 2 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 8,955.05 |
| 3 | யாழ் பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 366,404.85 |
| 4 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 264,600.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்
2019.12.10

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி மார்க்கண்டு**
திதி: வளர்பிறை சதுர்த்தசி

தோற்றம் 18.01.1940 — மறைவு 22.11.2018

அன்பின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து - எம்மை
வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளை சுமந்து
ஒருவருடம் கடந்தோடியும்
ஆறாத்துயருடன்......

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நிகழ உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்விலும் தொடர்ந்துவரும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
மருதனார்மடம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 .... 10 .... 1945



இறைவன் அடியில் 21 .... 11 .... 2018

CS29828(16/17)

அமரர் திருமதி
**விஜயலட்சுமி அம்பலவாணர்**
திதி: 11.12.2019



ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும்
நீங்காது உங்கள் நினைவு - எம்
நெஞ்சங்களைவிட்டு!

இல.60, மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

அகலா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவகுமார்



தோற்றம் 12.11.1955 — மறைவு 08.12.2019

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுமார் கடந்த (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், ஜெயகுமாரி, சாந்தகுமார், காலஞ்சென்றவர்களான ஞானகுமாரன், உதயகுமார் மற்றும் விஜயகுமார் (சவுதி), இந்திரகுமாரி, சாந்தகுமாரி, நந்தகுமார் (டோகா), வசந்தகுமாரி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், மணிமதன் (பிரான்ஸ்), நிரஞ்சனா, நிபர்ணா, நிதர்ஷனா (லண்டன்), நிலோஷனா, பால்ராஜ் (பிரான்ஸ்), சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபா (பிரான்ஸ்), உதயசூரியன், சசிக்குமார், செல்வகுமார் (லண்டன்), றேகன், ஜெயதர்ஷினி, சதாகணேசன் (சுவீடன்), ஆகியோரின் அன்பு மாமனாரும், தயிந்தினி, துபிந்தா (லண்டன்), அகநிலவன், அபிஷன் (லண்டன்), மிருத்திகன் (பிரான்ஸ்), மேதுன்ஜா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அனுஜித், சபிதன், மற்றும் பவிக்ஷா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 691 5394 — தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி நவமணி பொன்னுத்துரை



உரும்பிராய் வடக்கு உரும்பிராயை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவமணி பொன்னுத்துரை நேற்று (09.12.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைகளுக்காக இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 662 7809** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## நாகமுத்து காராளபிள்ளை

**(பிரபல வர்த்தகர் - விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

C11924(16/17)

யாழ். நயினாதீவு **5**ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து காராளபிள்ளை அவர்கள் **07-12-2019** சனிக்கிழமை அன்று (**92** ஆவது வயதில்) நயினாதீவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து, தையலம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வடிவாம்பிகை அவர்களின் ஆருயிர்க் கணவரும், சர்வானந்தசிவம், கிருபானந்த சிவம், ரதீஸ்வரி, நீலாணந்தசிவம், காலஞ்சென்ற விநாயகசிவம் (கண்ணா), பாலேஸ்வரி, நித்தியானந்தசிவம், குகனேஸ்வரி, கோபாலசிவம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீனாவதி, தயாளினி, காலஞ்சென்ற லோகநாதன், அமுதபதி, முருகவேள், தெய்வரஜனி, ஸ்ரீகாந்தமணி, யசோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா மற்றும் கனகம்மா, காலஞ்சென்றவர் களான சபாரெத்தினம், சிவக்கொழுந்து, இராசம்மா, கோபாலபிள்ளை, கணபதிப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரெத்தினம், இலட்சுமி, காலஞ்சென்றவரகளான அமுதலிங்கம், பார்வதி, நாகம்மா, சின்னத்துரை, பாக்யலெட்சுமி, சிவப்பிரகாசம், இராசரெத்தின்ம், சண்முகரெத்தினம் மற்றும் மகேஸ்வரி, சகுந்தலாதேவி, இந்திராதேவி, பிரேமளாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான திருலிங்கநாதன், கந்தசாமி, மற்றும் ஆனந்தசிவம் ஆகியோரின் பாசமிகு சகலனும், கோபிநாத், நிலக்ஷனா, தனுராஜ், சரணியா, சரணியன், சாமினி, சஞ்சித், சாலினி, மதுசாகி, நிதுனன், சயனவி, சாரங்கி, தீரன், காருணி, ரம்மியா, சசிகாந், மகிழவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **12.12.2019** வியாழக்கிழமை அன்று முற்பகல் **10.00** மணிக்கு நயினாதீவு சல்லிவரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



தோற்றம் 08.03.1927 மறைவு 07.12.2019

**தகவல் :குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:- வீடு - மனைவி Mobile: +94213210887, சுதா - மகன் Mobile: +94774203778, ரதி - மகள் Mobile: +94750397116, கிருபா - மகன் Mobile: +94778888756, இராசன் - மகன் Mobile: +94779453440, முருகவேள் - மருமகன் Mobile: +19054771237,

# மனித உரிமைகளை மதிக்கும் நாடு வேண்டும்

■ அந்தோனிமார்க்





சர்வதேச மனித உரிமை தினம் உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதன்படி நாட்டில் உள்ள மக்கள்அனைவரும் சகல உரிமைகளுடனும் வாழ உதவி அளிக்க வேண்டியது அவர்களின்கடமையாகும். பொதுமக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை மனித உரிமை ஆணைக்குழுவுக்குமுறையிட்டு நிவாரணம் பெற முடியும். இலங்கை அரசியல் அமைப்பின் 126 ஆம் உறுப்புரிமையின்கீழ்நீதிகேட்டுஉயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். இதன் மூலமும் நிவாரணம் பெற முடியும். இதற்கு அப்பால் நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, வன்புணர்வு, அநீதிகள் சம்பந்தமாக அந்தந்த மாவட்டங்களில்உள்ளநீதிமன்றங்களிலும் முறையிட்டு உதவி பெற முடியும்.

**மலிந்து கிடக்கும் உரிமை மீறல்கள்**

இன்று இலங்கையில் விசேடமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மலிந்து கிடக்கின்றன. நடந்து முடிந்த போர்க்காலத்தில் ஒன்றரை லட்சம் மக்களைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

இராணுவப் போர் விமானத் தாக்குதலினால் பல ஆயிரக்கணக்கான வீடுகளும், பொதுக்கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறார்கள்.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள் 1000 நாள்களுக்கு மேலாகப் போராட்டங்கள் நடத்திவருகின்றனர். ஆனால் இதற்கும் இன்றுவரை ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

**ஐ.நா. சபை தீர்மானங்கள்**

2015 ஆம் ஆண்டு ஐ.நா. சபைத் தீர்மானத்தில் 4 அம்சங்கள் எடுக்கப்பட்டன.

1விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல்

2.குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்குதல்

3.பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கல்

4.இனிமேல் நடைபெறாது பாதுகாத்தல்.

ஆனால் இவை ஒன்றும் இன்றுவரை நடைபெறவில்லை. அண்மையில் வேறு நாடுகளில் இப்படிப்பட்ட அழிவு நடைபெற்றமைக்கு ஐ.நா. சபை தீர்வு கூற முடியாத நிலையில், அவற்றை ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு பாரப்படுத்தி அவற்றின் பரந்துரையின் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால்இலங்கையின்விவகாரத்தில் ஐ.நா. சபையின் செயற்பாடுகள் கவலைக்குரியவையாக இருக்கின்றன.

**மாற்றுத் தீர்மானம்**

ஐ.நா. சபையின் மனித உரிமைக் கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக மாற்றுத் தீர்மானம் ஒன்று கொண்டு வர இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அரசியல் அமைப்பின் 13ஆவது சரத்துக்கு எதிராக மாற்றுத் தீர்மானம் எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். 1987ஆம் ஆண்டில் இருந்து இது வரை மூன்று தடவை 13 ஆம் சரத்துக்கு மேலதிகமாகவும் தான் உரிமை வழங்கப்போவதாக திடமாக மகிந்த ராஜபக்ச கூறி வந்துள்ளார். மகிந்த எடுத்த தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றம்மூலம் வடக்கு- கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்க ப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட மாகாண சபை முறைகளையும் மாற்றி அமைக்கப் போவதாக ஜனாதிபதி கூறுகிறார். தற்போது திம்பு உடன்படிக்கை ஒஸ்லோ தீர்மா னத்துக்கு எதிராக தமிழ்பிரதேசங்களில் சிங்களக் குடியே ற்றங்கள் ஏற்படுத்தி அதை இன்னும் அதிகரித்து வருகிறார்கள். இராணுவ முகாம்களை பலப்படுத்துவதன் மூலம்வடக்கு-கிழக்குமாகாணங்களில்பௌத்த விகாரைகளை நிறுவி பௌத்தபிக்குகளை தமிழ்க் கிராமங்களில் நியமித்து வருகிறார்கள்.

**அபகரிப்பு**

தமிழ் மக்களின் காணிகளையும் அரசதேவைபாதுகாப்பு தேவையென கூறி அபகரித்து வருகிறார்கள். வெகுவிரைவில் தமிழர் பிரதேசம் அதிகப்படியான இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் பௌத்த சிங்கள இராச்சியமாக மாறக்கூடும் என அஞ்சுகின்றனர்.

**ஜனாதிபதி பெற்ற வாக்குகள்**

ஜனாதிபதி கோத்தபாய 52 வீதமான வாக்குகளைப் பெற்றதில் தான் எதையும் செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட மலையக மக்கள் முஸ்லிம் மக்கள் மற்றும் மிகுதியாகவுள்ள 12 மாவட்டங்களில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களும் சேர்ந்து 5 லட்சம் அளவான வாக்குகளை கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்கியுள்ளனர். இவர்கள் மற்ற தமிழர்களுடன் சேர்ந்து மேற்படி 5 லட்சம் வாக்குகளை சஜித்துக்கு வழங்கியிருப்பார்களாயின், 52 வீதம் வெற்றிவாய்ப்பு 49 வீதமாக மாறியிருக்கும்.

அவ்வாறு ஏற்பட்டு இருந்தால் விருப்பு வாக்குகள் எண்ண வேண்டியேற்பட்டிருக்கும்.

அப்படியென்றால் தெரிவில் மாற்றம் ஏற்பட்டு இருக்கும்.

சாந்தி சமாதானத்தோடு கூடிய நல்லாட்சியை ஏற்படுத்த மக்களையும், சர்வதேசத்தையும், ஐ.நா. சபையையும் கோத்தபாய திருப்திப்படுத்துவார் என நம்புகிறோம்.

2019 டிசெம்பர் 10ஆம் திகதி மனித உரிமை தினத்தில் ஜனாதிபதி கோத்தபாய மனித உரிமைகளை மதித்து, தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் பௌத்த பிக்குகள், பௌத்த விகாரைகளை அமைத்தலை நிறுத்த வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

*கட்டுரையாளர்:*
*மன்னார் சமாதான அமைப்பு தலைவர்*

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கேள்விக்குறியாகும் ஒற்றுமை?

தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தவும் தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தவும், தமிழர் தரப்புக்கள் ஓரணியில் திரள்வது அவசியம் என்பதை உணர்ந்தே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன், அவர்களின் பங்களிப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

எந்த மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தினார்களோ அந்த மக்களுக்கு எதிராகவே ஆயுதங்களைத் திருப்பியவர்கள் எல்லோருக்கும் விடுதலைப் புலிகள் 'பாவமன்னிப்பு' வழங்கி கூட்டமைப்பில் இணைத்து, அவர்களை அரசியல் நீரோட்டத்தில் பயணிக்க அனுமதித்தார்கள்.

தமிழர்களின் பலம் கூட்டமைப்பு என்கின்ற நிலையில் இருந்தாலும், 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் மௌனிப்புடன் கூட்டமைப்பும் உடையத் தொடங்கியது. 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெளியேறியது. இதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ்., விக்னேஸ்வரன் அணி என்று கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு அவர்கள் அடுத்தடுத்து வெளியேறினார்கள்.

கூட்டமைப்பு பலவீனப்படுத்தப்பட்டதன் விளைவு, கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தென்னிலங்கை தேசியக் கட்சிகள் வடக்கு மக்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்கு வாய்ப்பாகின. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கட்சிகளும் ஓரணியில் இல்லை. அவர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டு தனி வழியில் பயணிக்கின்றனர்.

ஆனால் சிங்கள மக்கள் ஓரணியில் திரண்டு தங்களின் தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். சிங்கள மக்களின் ஒற்றுமைக்கு நிகரான ஒற்றுமை கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில் மக்களிடத்தில் இருந்தது. ஆனால் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களிடத்தில் இருக்கவில்லை.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான அணியினர் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாக்களிப்பதற்கான சூழலே இதுவரை காணப்படுகின்றது.

ஆனால் மறுபுறம், மிகப் பலமாகவேண்டிய இந்தத் தருணத்தில் தமிழர்களின் ஒற்றுமை சிதைக்கப்படுகின்றது. தெற்கில் விஸ்பரூபம் எடுத்துள்ள சிங்கள–பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு, தமிழ் மக்களை ஓரணியாக்கி, தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தியாகவேண்டும்.

வாக்குகள் சிதறுண்டுபோவது, தென்னிலங்கைக் கட்சிகளும் அவர்களின் முகவர்களும் தங்களையும் தமிழர் பிரதிநிதிகள் எனச் சொல்லி, தமிழர்களின் உரிமைகள் விற்கும் நிலையை உருவாக்கிவிடும்.

ஒற்றுமை பற்றி பாலர் வகுப்பில் படித்த பாடத்தை தலைவர்கள் பலரும் மறந்து விடுகின்றனர். தமிழர்கள் உரிமையை மாத்திரம் மனதிலிருத்தினால், தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்பட முடியும். பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க முடியும். இனியும் பிளவுண்டு தமிழினம் சிக்கிச் சின்னாபின்னமாகாமல் இருக்க தலைவர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

# வவு. சேமமடுப்படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

வவுனியா, டிசெ. 10

வவுனியா சேமமடுவில் இராணுவத்தினரால் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட 28 பேரின்நினைவேந்தல்நேற்றுமுன்தினம்நடைபெற்றது.



இதனையொட்டி சேமமடு பிள்ளையார் ஆலய வளாகத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளும் நடைபெற்றன. 1984 ஆண்டு மார்கழி மாதம் 2 ஆம் திகதி அதிகாலை 5மணியளவில் சேமமடு முதலாம் யுனிற் மற்றும் 2ஆம் யுனிற் பகுதிகளுக்குச்சென்ற இலங்கை இராணுவத்தினர்வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த 28 பொதுமக்களைவலுக்கட்டாயமாக அழைத்து வாகனங்களில் ஏற்றிச்சென்றிருந்தனர். பின்னர் காணாமலாக்கப்பட்டனர். அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம்என்றுஅவர்களுடைய உறவுகள் நம்புகின்றனர். அவர்களின் 35ஆவது நினைவேந்தலேஅவர்களுடைய உறவுகளால் கடைப்பிடிக்கப்பட்டது. (த-110)

*அச்சுவேலி பஸ் நிலையச் சுற்றாடலில்*

## மின்விளக்குகள் பொருத்த சரா எம்.பி. நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, டிசெ.10

அச்சுவேலிபஸ்நிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ளபகுதிகள்புதியமின்விளக்குகள் மூலமாக ஒளியூட்டப்படவுள்ளன.



யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன் இதற்கென மூன்று லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதனையடுத்து புதிய ரக மின்விளக்குகளை அங்கு பொருத்தவலி.கிழக்குப்பிரதேசசபைஏற்பாடுசெய்துவருகின்றது. (த-11)

## திருமலை மீனவர் சடலமாக மீட்பு

திருகோணமலை மனையாவெளி பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற படகு கற்பாறையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் காணாமல் போன மீனவர் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

திருகோணமலை மனையாவெளிபகுதியைச்சேர்ந்தஎம். எச்.றுக்மன்த சில்வா (வயது 37)என்பவரேஇவ்வாறுசடலமாகமீட்கப்பட்டவராவார். (ம)

# பரீட்சைகளில் குழப்பம்: பாய்கிறது சட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

க.பொ.தசாதாரணப்பரீட்சையின் போது குழப்பங்களை ஏற்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை பரீட்சை ஆணையாளர்நாயகத்தால்வெளியிடப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண பரீட்சை நாளைமறுதினம் 12ஆம் திகதி நிறைவடையவுள்ளது. இதன்பின்னர்பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்மற்றும்ஏனையபரீட்சார்த்திகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள்மீதுநடவடிக்கைஎடுக்கப்படும்என்று அந்தஅறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-7)



இந்துமதி


# ஐ.தே.கவுக்குள் ரணிலின் எதிர்காலம் என்னவாகும்?

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் குழப்ப நிலையொன்று தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாகக் குழப்ப நிலையொன்று காணப்பட்டது. தற்போது கட்சித் தலைமை தொடர்பாகவே அங்கு மோதல்கள் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது.

தலைமைப் பதவி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மோதல் இடம்பெறுவது புதியதொரு விடயமல்ல. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைச் சந்தித்ததன் பின்னர் கட்சியை ஆற்றுப்படுத்துகின்ற செயற்பாடுகள் இடம்பெறுவதற்குப் பதிலாக அதை மேலும் பலவீனப்படுத்தும் வகையிலான மோதல்கள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தன கட்சியின் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்தார். அப்போதெல்லாம் அவருக்கு எதிராக ஒரு வார்த்தை தானும் கூறுவதற்கு கட்சிக்குள் எவருக்குமே துணிவு இருக்கவில்லை. அந்த அளவுக்கு இரும்புக் கரம்கொண்டு கட்சியினரை அவர் அடக்கி வைத்திருந்தார். இல்லையென்றால் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறைமையை அவரால் ஏற்படுத்தியிருக்க முடியாது. அவருக்குப் பின்னர் வந்த ஆர்.பிரேமதாச வுக்கு காமினி திசநாயக்க, லலித் அத்துலத் முதலி போன்றவர்கள் கட்சிக்குள் நெருக்கடிகளைக் கொடுத்த போதிலும் அவற்றை முறியடித்து வெற்றி காண்பதில் பிரேமதாசவுக்கு சிரமம் இருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ அம்மையாரைத் தோற்கடிப்பதற்கும் அவரால் முடிந்தது. ஏழை மக்களுக்கான வீட்டுத்திட் டங்களை உருவாக்கியதன் காரணமாக கிராமப் புறங்களில் அதிக செல்வாக்கு மிக்கவராகவும் அவரால் இருக்க முடிந்தது. அவரது மறைவு ஐ.தே.கவுக்கு அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவைத் தந்தது. இன்றுவரை அதை நிவர்த்தி செய்ய முடியவில்லை.

### ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு பின்னடைவு

அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட செல்வாக்காண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் கட்சியின் தலைமைப் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். ஜே.ஆரின் மருமகன் முறையானவர் என்ற மேலதிக தகுதியும் அவரிடம் காணப்பட்டது. ஜனாதிபதி பதவியில் அமர்ந்து கொள்வதே அவரது இலட்சியமாகவும் காணப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்த இலக்கை அடைவதற்கு அவரால் முடியவில்லை. கடந்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணிலும், மகிந்தவும் போட்டியிட்டனர். இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு மகிந்தவை விட ரணிலுக்கே அதிகளவில் காணப்பட்டது. ஆனால் புலிகளுக்கு வெறுப்பேற்றும் வகையில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவரான கருணாவைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரித்து வைப்பதில் ரணிலுக்கு முக்கிய பங்கு இருந்ததாகச் செய்திகள் வெளிவந்து புலிகளின் தலைமையைக் கடும் கோபத்தில் ஆழ்த்திவிட்டது. இதனால் அந்தத் தேர்தலில் தமிழர்களை வாக்களிக்க விடாது புலிகளின் தலைமை தடுத்துவிட்டது. இதனால் ரணிலுக்குக் கிடைக்க வேண்டிய தமிழர்களின் வாக்குகள் கிடைக்காமல் போய்விட்டன. இதன் காரணமாகவே மகிந்தவினால் அந்தத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது.



### கட்சித் தலைமையில் ரணிலுக்குத் தோல்வி

ரணில் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இடம்பெற்ற அநேகமான தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியால் தோல்வியைத் தழுவவே முடிந்தது. இதனால் கட்சியினர் ரணில் மீது அதிருப்தி கொண்டனர். கட்சித் தலைமையில் மாற்றம் வேண்டுமென்ற கோரிக்கையும் பலமாக எழுந்தது. ஆனால் இதையெல்லாம் சமாளித்து கட்சித் தலைமையில் தொடருவதற்கு ரணிலால் முடிந்தது. இறுதியாக இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் பெரும் இழுபறி நிலையொன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்டது. இதனால் சஜித் பிரேமதாச கட்சித் தலைமைக்கு எதிராகப் போராட வேண்டி நேரிட்டது. இதனால் நீண்ட தாமதத்தின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவை கட்சித் தலைமை நியமித்தது. சஜித்தின் தோல்விக்கு இதுவுமொரு காரணமாகக் கூறப்படுகின்றது. ரணில் தலைமையிலான அரசு மக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றவில்லை என்ற குற்றச்சாட்டு சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்ட ஒருவராகவே ரணில் தோற்றம்பெற்றார். ஆகவே நிலைமைகளை உணர்ந்து கட்சித் தலைமையைப் பொருத்தமான வேறொருவரிடம் ஒப்படைத்து விடுவதே ஐ.தே.கவின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாக அமையும். தமது சுயநலத்தை விட்டு கட்சிக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ரணில் சில தியாகங்களைச் செய்துதான் ஆக வேண்டும். கனவான் தனத்துடன் அவர் நடப்பாராயின் மக்கள் அவரைப் போற்றவே செய்வார்கள்.

“ரணில் தலைமையிலான அரசு மக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றவில்லை என்ற குற்றச்சாட்டு சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்ட ஒருவராகவே ரணில் தோற்றம்பெற்றார். ஆகவே நிலைமைகளை உணர்ந்து கட்சித் தலைமையைப் பொருத்தமான வேறொருவரிடம் ஒப்படைத்து விடுவதே ஐ.தே.கவின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாக அமையும்.”

## ஆசிரியருக்கான கடிதம்

### ஏழைக்கு உதவுங்கள் அதுவே கடவுளின் விருப்பமும்

பசித்தவருக்கு உணவும் தாகத்துக்கு நீரும் கொடுப்பது மிகப்பெரிய புண்ணியப்பேறு. நோயாளிக்கு உதவுவது வயோதிபர் மற்றும் ஊனமடைந்தவரை நேசித்து உதவுவது ஆண்டவருக்கு நாம் செய்யும் தொண்டுகள் போன்றவையே. அதேபோல் வறுமைக் கோட்டில் வாழும் ஏழைப் பிள்ளைகள் பாடசாலைச் சிறார்களின் கல்வி கற்றலுக்கு உதவுவதும் எதிர்காலச் சிறார்களை நற்பிரசைகளாக மாற்றுவதும் எமக்குள்ள மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் ஆகும். அந்த வகையில் ஊடகங்களில் தற்போது வறுமைப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை புலம்பெயர்ந்த வர்கள், தாயகத்தில் தாராள மனம் கொண்டவர்களால் வழங்கப்படுகின்றமை தமிழினத்திக் மனிதாபிமானத்தை வெளிப்படுத்திய வண்ணமுள்ளது. தற்போது ஆலய நிர்வாகத்தினரும் வறுமைப்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலை அதிபர் ஊடாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருவது மேலும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

**அ.அன்பு, வரணி.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# குடாநாட்டில் 1,900 ஹெக்ரேயரில் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்ப்பாணம் குடாநாட்டில் இம்முறை பெரும் போகத்தில் குறைந்தது ஆயிரத்து 900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயி கள் தயாராகி வருகின்றனர்.



சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு செய்கையாளர்கள், தமது விவசாய நிலங்களைச் சீர்ப டுத்தி வருகின்றனர். வலி.கிழக்குப் பிரதேசத்தில் கூடுதலான செய்கை யாளர்கள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை சீரடைந்ததும், விவசாயிகள் வெங்காயச் செய் கையை ஆரம்பிப்பர். அநேகமாக இந்த மாத இறுதியில் செய்கை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை குடாநாட்டில் சின்ன வெங்காயத்துக்குப் பற்றாக்குறை யும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அவற்றின் விலையும் அதிகரித் துள்ளது. திருநெல்வேலி சந்தை யில் நேற்று ஒரு கிலோ சின்ன வெங்காயம் 450 ரூபாவாக விற் பனை செய்யப்பட்டது என்று குறிப்பிடத்தக்கது. (க-17)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்ப்பாணம் சைவபரி பாலன சபையினரின் முழுநிலா ஆன்மீகச் சொற்பொழிவு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சபைத்தலைவர் இ.வசந் தசேனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோ சகர் சைவப்புலவர் செ.சத்தியதாசன் சிறப் புச்சொற்பொழிவு ஆற்ற வுள்ளார். (க)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

'ஆன்மீக சத்சங்கம்' எனும் ஆன்மிக நிகழ்வு நாளை புதன்கிழமை பிற் பகல் 3 மணிக்கு திரு நெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறும். (க)

## ஆலயங்களில்...

யாழ்ப்பாணம்,டிசெ.10

கோப்பாய் கற்பகப் பிள் ளையார் ஆலயத்தின் விநாயகர் விரத இலட் சார்ச்சனைப் பெருவிழா நாளை மறுதினம் வியா ழக்கிழமை ஆரம்பமா கும். தொடர்ந்து சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம் பெற்று,

எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலட்சார்ச்சனைப் பூர்த்தி இடம்பெறும்.

எதிர்வரும் ஜனவரி முத லாம் திகதி புதன் கிழமை அதிகாலை 5.30 மணிக்குத் திருவெம் பாவை ஆரம்பமாகும்.

+++

வட்டுக்கோட்டை உடுக்கி யவளை ஸ்ரீ மஹா கண பதிப் பிள்ளையார் ஆல யத்தின் லட்சார்ச்சனை கணபதி ஹோம பெரு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்ப மாகும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண பதி ஹோமம். திரு விளக்குப் பூசை இடம் பெறும். (க)



## நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

சங்கானை கலாசார மத் திய நிலையத்தில் 2020 ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப்படவுள்ள புதிய கற்கை நெறிகளுக்கான ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு நடை பெறவுள்ளது.

நாடகம், சங்கீதம், நட னம், மிருதங்கம், வய லின், சிங்களம், ஆங்கி லம் ஆகிய பாடநெறி களுக்கான ஆசிரியர் களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வ ரும் 13ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 10.30 மணிக்குச் சங் கானை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெ றும் என்று மத்திய நிலை யப் பொறுப்பதிகாரி அறி வித்துள்ளார். (க)

## யாழ்.குடாநாட்டில் – மரக்கறிச் செய்கை மும்முரம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

குறைந்தது 250 வரையான ஹெக்டேயர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கையை மேற்கொண்டுள் ளனர்.

கரட், பீற்றூட், கறிமிளகாய், தக்காளி, கத்தரி போன்ற மரக்கறி வகைகளே அதிகளவில் பயிரிடப் பட்டுள் ளன.

வலி.கிழக்கு மற்றும் வலி.வடக்குப் பிரதேசங்களிலேயே கூடுதலான செய்கையாளர்கள் இந்த மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது மாரி காலமாகையால் அதிகமான விவ சாயிகள் மேட்டு நிலங்களில் கூடுதலாக இந்த மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. (ஐ-17)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை திருக்கார்த்திகை உற் சவம் மற்றும் குமார லாய தீபம் என்பன நடைபெறும்.

அன்றைய தினம் பிற் பகல் 4 மணிக்குச் சிறப்பு அபிசேகம், சண்முக அர்ச்சனை மற்றும் கார்த்திகை உற்சவமும் குமாரலய தீபம் என்பன இடம் பெறும். (க-17)



## மழை தொடரும்

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக்குத்தென்கிழக்காகவிருத்தியடைந்துள்ள வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் காணப்படும் மழையுடனான வானிலை யில் இன்றிலிருந்து மேலும் அதிகரிப்பு ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது. குறிப்பாக கிழக்கு, ஊவா, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்குமென அந்தத் திணைக்களம் தெரி வித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இது தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'கிழக்கு, ஊவா, வடமத்திய, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மாவட்டங்களில் சில இடங்களில் 200 மி.மீ அள வான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படு கின் றது.

அனுராதபுரம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் சில இடங்களில் 100-150 மி.மீ. அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்க ளிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ் வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினா லும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக் கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்' என்றுள்ளது. (மு)

## வழுக்கையாற்றில் நாகபாம்புகள்!

### விவசாயிகளே அவதானம்!


யாழ்ப்பாணம்,டிசெ.10

நவாலி வழுக்கையாறு வயல்களுக் குள் நாகபாம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

அதனால் விவசாயி கள் வயல் வரம் புகளில் செல்லும் போதோ அல்லது களைநாசினி, உரம் போன்றவை விசிறும் போதோ அவதானமாகச் செல்லுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெளியிடங்களில் பிடிக்கப்படும் நாகபாம்புகள் வழுக் கையாறுப் பிரதேசங்களில் கொண்டு வந்து விடப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

களையோடை கண்ணகை அம்மன் பிரதேசங்களிலும் நாகபாம்புகள் இவ்வாறு விடப்படுகின்றன. அத



னால் விவசாயிகள் மிக அவதானமாக மழை காலங்களில் செயற்படுமாறு எச்சரிக் கப்பட்டுள்ளது. (க-50)



## வெள்ளத்தால் பாதித்தோருக்கு உதவி

முல்லைத்தீவு,டிசெ.10
முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ச. கனகரத்தினம் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு இந்த உதவிகளை வழங்கினார். (ஐ-ரி3)

# பாலங்களைச்சீராக்கியபடையினர்

கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த இரண்டு பாலங்களைப் படையினர் துரித கதியில் தற்காலிகமாக சீராக்கி மக்கள் பாவனைக்காக கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு, டிசெ. 10
புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் காளிகோவிலடியில் உள்ளபாலம் வெள்ளத்தால் உடைப்பெடுத்துப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்ட நிலையில், தற்காலிகமாக அது சீரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு நேற்று முன்தினம் திறந்துவிடப்பட்டுள்ளது.

எனினும், குறித்த பாலத்தை சீரமைக்கும் நோக்கில் அதற்கு அருகே தற்காலிக பாலம் அமைக்கப்படுகின்றது. அமைப்புப் பணி நிறைவுற்றதும் அதனூடாக போக்குவரத்து இடம்பெறும். அதன்பின்னர் தற்போதுள்ள பாலம் பெரும் நிதி ஒதுக்கீட்டில் நிரந்தரமாகச் சீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.



முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகத்தின் 9ஆவது இயந்திரப் படைப் பிரிவினர் தற்காலிக பாலம் அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாலம் மக்கள் பாவனைக்கு விடப்படும் நிகழ்வில் 64ஆவது படைப் பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கொஸ்தா உள்ளிட்ட படை அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா மற்றும் மதகுருமார் ஆகியோர் பங்கேற்றனர்.

(த-ரி3,222)

யாழ்ப்பாணம்,டிசெ.10
கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் கீரிமலை முதல் பொன்னாலை வரையான பிரதான வீதியில், மானிப்பாய், குசுமன்துறை பகுதியில் அமைந்துள்ள 30 அடி நீள மற்றும் 11 அடி அகலமுடைய பாலம் சேதமடைந்திருந்தது.

அதனால் பாலத்தின் ஊடான போக்குவரத்து பெரிதும் தடைப்பட்டிருந்தது. அதனையடுத்து யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் கட்டளைக்கு இணங்க பாலம் சீரமைக்கப்பட் டுள்ளது.

10ஆவது பொறியியல் படையணி மற்றும் 16 ஆவது கெமுணு படையணியினரின் கடின உழைப்புடன், தற்காலிகமாக மக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பாலம் சீரமைக்கப்பட்டுள்ளது. (க)



## தேறாங்கண்டல் குளத்தின் துருசுப் பகுதியில் நீர்க் கசிவு

முல்லைத்தீவு, டிசெ.10
தேறாங் கண்டல் குளத்தின் துருசுப் பகுதியில், நீர்க்கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, துருசைப் பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரு நாள்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள குளங்களில் பெரும்பாலானவை நிரவி வான்பாய்ந்தன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவில் வவுனிக்குள நீர்ப்பாசனப் பிரிவில் உள்ள தேறாங்கண்டல் குளத்தின் துருசுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நீர்க்கசிவு ஏற்பட்டது.

இதை அவதானித்த குளப்பராமரிப்பாளர் உடனடியாக, அங்குள்ள விவசாயிகள் அப்பகுதி சமுர்த்தி அலுவலர், இராணுவத்தினருக்கும் சிவில் பாதுகாப்பு ஊழியர்களுக்கும் தகவல் வழங்கியதை அடுத்து அனைவரும் இணைந்து குறித்த நீர்க்கசிவை சீர்செய்தனர். (ஐ-222)



## 120 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம்

மன்னார்,டிசெ.10
வெள்ள இடரால் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து தற்காலிக நலன் புரி முகாம்களில் வசித்து வரும் மக்களுக்கான, நிவாரணப் பொருள்கள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் சொந்த நிதியில் இருந்து நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. செம்மண்தீவு, பெரிய கரிசல், சாந்திபுரம், செல்வேரி ,சின்ன பண்டிவிரிச்சான் பகுதிகளின் 120 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன.

நிவாரணப் பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் இணைப்பு செயலாளர் எம். தர்ஸீன், மாந்தை மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் எம்.தௌபிக், மன்னார் நகர சபை உறுப்பினர் பொலிங்டன், சமூக ஆர்வலர் அன்ரன் மெடோசன் பெரேரா ஆகியோர் இணைந்து பயனாளிகளிடம் கையளித்தனர். (க-56)

## 250 குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகள்

மன்னார்,டிசெ.10
மன்னாரில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு பொதுநலன்விரும்பி ஒருவரால் அரிசிப் பொதிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

பெருமாள் சிவகுமாரன் என்பவரே இவ்வாறு தனது சொந்தச் செலவில் குறித்த அரிசிப் பொதிகளை வழங்கினார்.

மாந்தை மேற்கில் இலுப்பைக்கடவை, வண்ணாகுளம், அடம்பன், வாமதேவன்புரம் போன்ற இடங்களிலும், நானாட்டானில் உயிலங்குளம், வட்டுப்பியத்தான் மடு போன்ற பகுதிகளிலும் இடரால் பாதிக்கப்பட்ட சுமார் 250 குடும்பங்களுக்கு இந்த அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-213)





'ஜீவஊற்று- அன்பின் கரம்' அறக்கட்டளை அமைப்பினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா இலுப்பைக்குளம் பகுதியில் உள்ள 52 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கினர். (ஐ-222)

# கல்லுண்டாய்க் கழிவுகளால் ஆபத்து!

யாழ்ப்பாணம், டிசெ.10
கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் பல்வேறு ரகமான மனித அபாயக் கழிவுகளால் நவாலி - ஆனைக்கோட்டை மக்களுக்கு விரைவில் பலவித நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பகுதி எச்சரித்துள்ளது.

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட கல்லுண்டாய் வெளியில் மனிதர்களின் மலக்கழிவு, கழிவுநீர்க்கழிவு, சமையலறைக் கழிவு, திண்மக்கழிவு மற்றும் கோழி இறைச்சிக் கழிவுகள், வர்த்தக மற்றும் ஹோட்டல்களின் கழிவுகள் என்பன வரைமுறையற்று தொடர்ந்து கொட்டப்படுகின்றன.

இந்தக் கழிவுகளின் 80 வீதமான கழிவுகள். யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேச சபைகளாலும், மிகுதி 20 சவீதமான கழிவுகள் மானிப்பாய் பிரதேச சபையாலும் கொட்டப்படுகின்றன.



பொறிமுறையற்று கடந்த 20 வருடங்களுக்கு மேலாகக் கொட்டப்படும் கழிவுகளால் வலி.தென்மேற்கு பிரதேசத்தை சேர்ந்த நவாலி - ஆனைக்கோட்டை பிரதேச மக்கள் முழுமையாக நோய்த்தாக்கத்துக்குள்ளாகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

நவாலியில் இருந்து 1.5 கிலோமீற்றர் இடைவெளியில் கொட்டப்படும் கழிவுகளில் பல ஆயிரக்கணக்கான வெற்றுப் பேணிகளில் கழிவுநீர் தேங்கியுள்ளது. அதனால் ஏற்படும் டெங்கு அபாயம் தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் கவனம் செலுத்த வேண்டும் என்று பொது மக்களும், சமூக அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கடந்த கால வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், மாவட்ட ஒருங்கணைப்புக் குழுக் கூட்டத்திலும் பொது அமைப்புக்களால் விரிவாக விளக்கப்பட்டிருந்தது. ஆயினும் இதுவரையில் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2020 க்குள் கல்லுண்டாயில் கழிவுகள் கொட்டப்படுவது சம்பந்தப்பட்டோரால் நிறுத்தப்படவேண்டும். இல்லாவிடில் வலி.தென்மேற்கில் உள்ள சமூக அமைப்புக்கள் ஒன்று திரண்டு, நவாலி, ஆனைக்கோட்டை வாழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாரிகாலம் கழிந்து, கோடை வந்ததும் சம்பந்தப்பட்ட சபையின் ஊழியர்கள் கழிவுக் குதத்துக்கு நெருப்பு வைப்பதும் அதன் புகை துர்நாற்றத்துடன் நவாலி, ஆனைக்கோட்டை மக்களுக்கு சுவாச நோய், தோல்புற்று நோய் மற்றும் இதர நோய்கள் ஏற்படுவதற்கும் இது காரணமாக அமையப் போகிறது. எனவே தற்போதைய புதிய அரசும் இவ்விடயத்தை முன்னெடுத்து பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (க-50)



## கவனிப்பாரின்றி கரவெட்டி குப்பைமேடு

வடமராட்சி, டிசெ.10
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டப்படும் இடம் கவனிப்பார் அற்ற நிலையில், சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினர் தமது பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில், குப்பைகளைச் சேகரித்து சோனப்பு வெளியில் கொட்டுகின்றனர். ஆனால் இக் குப்பைகள் முறையாக கொட்டப்படாது தெருவோரங்களில் வீசப்படுகின்றது என்று குற்றஞ்சாட் டப்படுகிறது.

இவ்வாறு கொட்டப்படும் குப்பைகள் கட்டாக்கலி நாய்கள், காகங்களால், இழுத்துச் செல்லப்பட்டு, வீதியோரங்களில் போடப்படுகின்றன என்றும். அந்தக் குப்பைகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்களால் குற்றம் சாட்டப்படுகிறது.

குப்பைகளை முறையாக கொட்டப்படுவதை அவதானிப்பதற்கு பாதுகாப்பு அலுவலகர்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ள போதும் குப்பைகள் வெளில் கொண்டு செல்லப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மக்களுடைய குற்றச்சாட்டு தொடர்பாக கரவெட்டிப் பிரதேச சபை தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது "குப்பைகளைப் பாதுகாப்பதற்கு என ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு பக்க மதில் உடைந்து வீழ்ந்துள்ளது. அதன் வழியாக குப்பைகள் இழுத்துச் செல்லப்படலாம். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஜ-422)

## சங்காபிஷேகம்

கொடிகாமம், டிசெ.10
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் திருக் கார்த்திகை தினத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகமும் ,சண்முக அர்ச்சனையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும். (க-159)



## தென்பகுதிக் கழிவுகள்; நாறுகிறது செம்மணி

யாழ்ப்பாணம், டிசெ.10
யாழ்ப்பாணம் செம்மணி வீதி அண்மைக்காலமாகக் கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறி வருகிறது. அதனால் அந்தப் பகுதியில் பயணிப்பதில் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக தென்பகுதியிலிருந்து வாகனங்கள் பலவற்றில் கொண்டு வரப்படும் குப்பைகள் மற்றும் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கழிவுகள், வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்படுகின்றன.

அந்தக் கழிவுகள் அங்குள்ள வயல் நிலங்களில் ஒதுங்கி நெற்செய்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளன. அத்துடன் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்துகழிவுகளைக் கொட்டவிடாது கவனிக்க வேண்டும் அல்லது கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தி வீதியைக் கண்காணித்து பிரதேச வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-288)

## மருத்துவமனையில் எரிக்கப்படும் கழிவுகள்

### வாகனத்தை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.10
பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வளாகத்துக்குள் ஏனைய மருத்துவமனைக் கழிவுகளும் கொண்டு வரப்பட்டு எரிக்கப்படுவதை எதிர்த்து கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சாவகச்சேரி தனியார் மருத்துவமனைக் கழிவுகளை ஏற்றிவந்த வாகனத்தை மறித்தே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பருத்தித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் எஸ்.குகதாசனுடன் கலந்துரையாடினர்.

இனிமேல் கழிவு எரிப்பது நிறுத்தப்படும் என்றும் கூறியதை அடுத்து, கழிவு ஏற்றி வந்த் வாகனம் திருப்பி அனுப்பப்பட்டது. அதனால் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இது விடயமாக மந்திகை கருகம்பன் கிராம மக்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 2016 ஆண்டு முதல் ராமத்தில் கழிவுகள் எரிக்கப்படுகின்றன. இதனால் எழும் புகை எமது கிராமத்துக்குள் வருவதால், மக்கள் சுவாசிக்க முடியாதவாறு அசுத்தக் காற்றைச் சுவாசிக்கின்ற னர். பிள்ளைகள் உணவு உண்ணுவதையே தவிர்த்து வருகின்றனர். கிணற்றில் மனிதக் கழிவுகள் கலக்கின்றன. அதனைப் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் உறுதி செய்துள்ளது.

இதனால் குடி தண்ணீர் பெறும் ஒரே ஒரு பொது கிணறும் பயன்படுத்த முடியாத நிலைக்கு போயுள்ளது.

இது தொடர்பாக பல தடவைகள் மருத்துவமனை அத்தியட்சகர், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனை, பருத்தித்துறை பிரதேச சபை ஆகியோருக்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றனர். எனினும் மருத்துவ அத்தியட்சகர் குறித்த குற்றச் சாட்டுக்களை முற்று முழுதாக மறுத்துள்ளார். (க-160,173)



நெடுந்தீவுக் கடலில் -

## கடலில் கைவிட்டது றோலர்

### தெய்வாதீனமாக தப்பினர் 3 மீனவர்

யாழ்ப்பாணம், டிசெ. 10
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கடற்றொழிலுக்குச் சென்றபோது றோலர் படகு வெடித்ததால் கரை திரும்பிக்கொண்டிருந்தபோது, அலை காரணமாக படகு பாறையுடன்மோதிச் சிதைந்தது. அதில் பயணித்த மூவரும் கடும் போராட்டத்தின் பின்னரே நீந்திக் கரைசேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நெடுந்தீவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து றோலர் படகில் அவர்கள் தொழிலுக்குச் சென்றிருந்தனர். ஏற்கனவே காற்றும் கடற்கொந்தளிப்பும் காணப்பட்ட நிலையில், திடீரென பூதாகாரமாக எழும்பிய அலைகள் படகையும் மீனவர்களையும் கடற்பாறைகளோடு தூக்கி வீசியது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் படகு முற்றிலும் அழிவடைந்த நிலையில் நீந்திக் கரைசேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.10
இலங்கையில் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பான சிறப்பு விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சமூக சிற்பிகள் நிறுவனத்தின் சோனகதெரு பிரதேச இளைஞர் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் சட்டங்களை எவ்வாறு பயன்படுத்துவது? அதை பரீட்சிக்கும் பொழுது ஏற்படும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது? அதன் நன்மைகள் யாவை? போன்ற விடயங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

வளவாளர்களாக சமூக சிற்பிகள் நிறுவனத்தைச் சேர்ந்த ரங்கன் மற்றும் ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், முதியோர் சங்க பிரதிநிதிகள், இளைஞர் கழக பிரதிநிதிகள், மதத்தலங்களின் நிர்வாகசபை பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)



## நூலகம் திறப்பு

வுவனியா டிச. 10
வவுனியா செட்டிகுளம் இரண்டாம் பண்ணைப் பகுதியில் நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த நூலகத்துக்கு ஒரு லட்சத்து 50 அயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டன. நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காக நுலகம் திறக்கப்பட்டது.

சமத்துவம் மற்றும் நீதிக்கான மையத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையின் வழிகாட்டலில் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட செயற்றிட்டத்தின் அடிப்படையில் இந்த நூலகம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் செட்டிகுளம் கிளைத் தலைவர் தர்மலிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் எஸ். தர்மரட்ணம், வவுனியா இளைஞர் சம்மேளனத் தலைவர் திவக்சன், சமூக சேவையாளர் ஜெகன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ-104)

## கீரைப்பிடி 60 ரூபா

யாழ்ப்பாணம்,டிசெ.10
கடந்த வாரம் கொட்டித் தீர்த்த கன மழையால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் கீரைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் சந்தையில் கீரையின் விலை அதிகரித்துள்ளது.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர்ப் பிரதேசங்களில் உள்ள தாழ்ந்த விவசாய நிலங்களில் வெள்ளம் ஏற்பட்டதால் பயிரிடப்பட்ட கீரைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. செய்கையாளர்கள் கீரைச் செய்கையில் இம்முறை அதிகம் ஈடுபட்டிருந்தனர். செய்கை பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் திருநெல்வேலி சந்தைக்கு கீரைகளின் வருகை குறைவடைந்துள்ளதால் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன. ஒரு கீரைப்பிடி நேற்று 60 ரூபாவாக விற்கப்பட்டது (சு-17)

# நங்கூரமிடும் தளம் இல்லை

# படகுகள் சேதம்

### பிரச்சினையைத் தீர்க்க நெடுந்தீவு மீனவர்கள் கோரிக்கை

நெடுந்தீவு, டிசெ. 10
நங்கூரமிடுவதற்குத் தளம் இன்மையால் காற்று, கடற்கொந்தளிப்பு என்பனவற்றால் தங்களுடைய படகுகள் சேதமடைந்துவருகின்றன. அதனால் பெரும் இழப்புக்களைச் சந்திக்கவேண்டிய அவலம் நீடிக்கின்றது என்று கவலை தெரிவிக்கும் நெடுந்தீவு மீனவர்கள், நங்கூரமிடுவதற்குத் தளம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



கோப்புப்படம்

இது பற்றி நெடுந்தீவுப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அருள் ஜீவன் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பல்வேறு நிலைகளிலும் பின்தங்கிக் காணப்படும் நெடுந்தீவில், பெரும்பாலானோர் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றோம். றோலர் படகுகள், சிறிய படகுகள், தெப்பங்கள் என ஐந்நூறுக்கும் மேற்பட்ட மீன்பிடிக் கலங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பான முறையில் நங்கூரமிட்டு தரித்து வைப்பதற்கும், பாதுகாப்பாகக் கரைசேர்க்கவும் எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை.

காற்று கடுமையாக வீசும் நாள்களில், கடல் கொந்தளிப்பான நாள்களில் படகுகளைக் கட்டியிருக்கும் கயிறுகள் அறுபட்டு படகுகள் பாறைகளுடன் மோதும் நிலை ஏற்படுகிறது. இதனால் பெரும் இழப்புக்களையும், சேதங்களையும் நாங்கள் எதிர்கொள்கின்றோம்.


கடந்த வியாழக்கிழமை வீசிய கடும் காற்று மற்றும் கடற்கொந்தளிப்பால், ஒரு றோலர் படகு முற்றாகச் சேதமடைந்தது. அதனால் 12 இலட்சம் ரூபா இழப்பு ஒரு மீனவருக்கு ஏற்பட்டுள்ளது. இப்படி முன்னரும் ஏராளமானோர் இழப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அதிலிருந்து மீளமுடியாதுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நாம் பல வருடங்களாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் இன்னும் பல தரப்பினருக்கும் கூறியுள்ளோம். ஆயினும் இன்றுவரை தீர்வில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டால், நெடுந்தீவின் கடற்றொழில் மேம்பாடு அடையும். எமது வாழ்வாதாரம் சிறப்பாகும். எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-21,104)

## 'மனப்பாரம்' நூல் வெளியீடு

கொடிகாமம்,டிசெ.10
கனக.பாரதி செந்தூரன் எழுதிய மனப்பாரம் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரியர் இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கௌரவ விருந்தினராகப் பளை மாசார் அ.த.க பாடசாலை அதிபர் க.கருணானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். மன்னார் மடு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.லோகேஸ்வரன் நூல் மதிப்பீட்டு உரையை நிகழ்த்துவார். மாசார் அ.த.க பாடசாலை அதிபர் நூலை வெளியிட பிரதம விருந்தினர் பெற்றுக் கொள்வார். (சு-159)



முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை அருணகிரிநாதர் என்பவரின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் அவரது பிள்ளைகளால், முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலையில் தரம் 9இல் கல்வி கற்கும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (க-222)

# கத்துக்குட்டிகள் எல்லாம் கட்சிகளை ஆரம்பிக்கிறார்கள்

## அவைத் தலைவர் சீ.வீ.கே. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 10

கத்துக் குட்டிகள் எல்லாம் புதிய கட்சிகளை ஆரம்பிக்கும் போது இங்கு இருந்து போனவர்கள் கட்சி ஆரம்பிப்பது பிரச்சினையில்லை. அது அவர்களின் விருப்பம்- என்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதனை மாத்திரம் நீக்கக்கோருவதில் அர்த்தமில்லை.

**புலனாய்வாளர்களின் திட்டமிட்ட செயல்**

அண்மையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலரை ஜனாதிபதி விடுத்துள்ளார் என்று செய்திகள் பரவியிருந்தன. எனினும், தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று அறியவில்லை.

இது, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்ற மாயையை உருவாக்கி நாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர் என்றும் இராணுவத்தினர் சிறையில் உள்ளனர் என்றும் தோற்றப்பாடுகளை உருவாக்கத் தென்னிலங்கையிலுள்ள சில சக்திகள் முயற்சிக்கின்றன. இதனால் பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இராணுவ வீரர்களை விடுதலைசெய்ய சதிகள் நடைபெறுகின்றனவா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. இவை முழுக்க முழுக்க புலனாய்வுத் தகவலாளிகளின் திட்டமிட்ட செய்தியாகவே நான் பார்க்கின்றேன்.

**தமிழரின் குருதியில் உள்ள குணம் இது**

சிங்களக் கட்சிகள் உட்பட அவர்களுக்குத் தோள்கொடுக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுவார்கள் என்பது நடக்காத காரியம். எங்களிடமிருந்து சென்ற விக்னேஸ்வரன்கூட அவ்வாறு சேர்ந்து செயற்படவில்லை.தமிழரின்பரம்பரைக் குருதியில் இருக்கும் குணம் யாரோடும் சேர்ந்து செயற்பட மாட்டார்கள். மாற்றுத் தலைமை என்று போனவர்கள்கூட ஒற்றுமையாக இல்லை. இவர்கள் ஒன்றாகச் சேர்ந்தால் கூட்டமைப்புக்கு அது ஒரு வாய்ப்பாக அமையும்- என்றார். (து-7,ரி1)



# அங்கக் குறைவென்பது ஆற்றல் குறைவல்ல

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய அறுவர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

இவர்களில் இருவர் போரில் பாதிக்கப்பட்ட போதிலும், யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தொழில் பூங்கா விடுதியிலிருந்து க.பொ.த.சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் உரிய பெறுபேறுகளைப் பெற்று, பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகத் தகைமை பெற்றுள்ளனர். அத்துடன் கந்தசாமி கல்வி நிலைய உதவியைப் பெற்று கல்வியைத் தொடர்ந்த மூவரும் பட்டம் பெற்றுள்ளனர்.

எதிர்மனசிங்கி கிளைமன் கிறிஸ்டில்டா,வி.விஜயலட்சுமி, சந்திரராசா விக்கினேஸ்வரன், சி.பிரதீபன், எஸ்.மாதினி ஆகியோர் இளம் கலைமாணி பட்டத்தையும், சொர்ணலிங்கம் தருமதன் இளம் சட்டமாணிப்பட்டத்தையும் பெற்று பட்டதாரிகளாக மகுடம் சூட்டப்பட்டுள்ளனர். (க)

## கருத்தரங்கு

பேராசிரியர் க. கைலாசபதியின் 37ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்குகொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 3.30மணிக்குநடைபெறவுள்ளது. த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள கருத்தரங்கில், நினைவுப் பேருரையை 'பிராந்திய அதிகாரப் போட்டியில் அதிமானுடர்களுக்கான அவா' என்ற தலைப்பில்அரசியல்ஆய்வாளர் ஞா.மீனிலங்கோ ஆற்றவுள்ளார். (ஐ)

# சாவ. மருத்துவமனைக்குள் இளைஞர்கள் அடாவடி





சாவகச்சேரி, டிசெ. 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குள் மது போதையோடு நுழைந்து அடாவடியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

'இரண்டு இளைஞர்களும் மருத்துவமனைக்கு வந்துள்ளனர். ரிக்கற் எழுதி மருத்துவரிடம் காட்டிய பின்னரே மருந்து கட்டுவோம் என்ற வழமையான நடைமுறையைபணியாளர்கள்கூறினர். அதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் மருத்துவமனையின் ஜன்னல் கண்ணாடி, பூந்தொட்டி, நோயாளர்கள் அமரும் வாங்கு என்பனவற்றை அடித்து நொருக்கினர். மருத்துவமனைப் பாதுகாப்பு அலுவலர் அவர்களைத் தடுக்க முற்பட்ட போது அவரையும் தாக்கினர். மேற்பார்வையாளரின் அறையில் இருந்த தொலைபேசியையும் நிலத்தில் வீசியெறிந்துள்ளனர். தொழிலாளர் மேற்பார்வையாளரான பெண்ணையும் தாக்கியுள்ளனர்.

இதுகுறித்து சாவகச்சேரிப்பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்து பொலிஸார் மருத்துவமனைக்கு வந்தனர். இதனை அடுத்து குழப்பம் விளைவித்துக்கொண்டிருந்த இருவரும் தப்பி ஓடியுள்ளனர். அவர்களை வாகனத்தில் வந்த பொலிஸார் துரத்திப் பிடித்துக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர். காயமடைந்த பாதுகாப்பு அலுவலர் மருத்துவமனை சிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த-9)

# வடமாகாண சபை ஊழல்கள்; விசாரணைக்குழு விரைவில்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

வடக்கு மாகாண சபை மற்றும் கிராம எழுச்சித் திட்டம் போன்றனவற்றில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைமேற்கொள்ள ஆணைக்குழு ஒன்று மிக விரைவில் அமைக்கப்படும் என்று நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவருடைய கட்சி அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் வடக்கு மாகாண சபையில் ஊழல்மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களை எதிர்த்தரப்புக்களோ வெளி நபர்களோ முன்வைக்கவில்லை. மாறாக ஆட்சியிலிருந்த அதே தரப்பில் உள்ளவர்களே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். அதுதொடர்பில்சிலவிசாரணைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது. எனினும் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு மாகாண சபையில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் அனைத்தும்வெளியில்கொண்டுவரப்படவேண்டும். கடந்த அரசு ஆட்சியிலிருந்தபோது கிராம எழுச்சித் திட்டங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன-என்றார். (து-ரி1)

# டெங்குத் தொற்றில் யாழ்.இரண்டாமிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தேசிய ரீதியில் யாழ்ப்பாணம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்கள் உறுதி செய்துள்ளன.

இலங்கையில் டெங்கின் தாக்கம் உள்ள மாவட்டங்களாக தென்னிலங்கையே இதுவரை காணப்பட்ட நிலமையில், இந்த ஆண்டின் ஆரம்பத்தில் முதல் 6 மாவட்டங்களுக்குள் இடம்பிடித்த யாழ்ப்பாணம் தற்போது இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் 4 ஆயிரத்து 118 பேர் டெங்குத் தொற்றாளர்களாக இனம் காணப்பட்ட நிலையில், யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்து 641 பேர் டெங்குத் தொற்றாளர் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை 2 ஆயிரத்து 378 பேர் கண்டி மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ளனர். அந்த மாவட்டம் மூன்றாம் இடத்தில் உள்ளது என்று சுகாதார அமைச்சின் தரவுகள் உறுதி செய்துள்ளன.

(க-105)

## டெங்கு ஒழிப்பில் த.தே.ம.முன்னணி



யாழ்ப்பாணம்,டிசெ.10

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டங்களை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் காணப்படுகின்ற குப்பைகளை அகற்றுவதுடன், வீதிகள், பொது இடங்களில் துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன.

அரியாலை, ஈச்சமோட்டை, யாழ் நகர்ப் பகுதி என மூன்று வட்டாரங்களில் இந்தச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து ஏனைய இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-ரி1)

## ஆரியகுளத்தில் டெங்கு ஒழிப்பு



யாழ்ப்பாணம். டிச.10

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ஜே/79 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள ஆரியகுளம் சிறாம்பியடிப் பகுதியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு இடம்பெற்றது. யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து. ஈசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற இந்த டெங்குஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டில் மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, பிரதேச சுகாதார பரிசோதகர், சனசமூக அங்கத்தவர்கள், மாதர்சங்க உறுப்பினர்கள், பிரதேச மக்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

(ஜ-104)

## சிறப்புத் தேவையுடையோர் தினம் தென்மராட்சியில் கோலாகலம்





சாவகச்சேரி, டிசெ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னவும் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர். சி. முரளிகரன், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச பிறப்பு இறப்பு பதிவாளர் க.மோகனராஜலிங்கம், கொடிகாமம் வணிகர் சங்க தலைவர் எஸ். அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேசசமூக சேவைகள் அலகினரால் பிரதேச சிறப்புத் தேவையுடையவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்கள் வழங்கி மதிப்பளித்தனர்.

(த-9)

## நியாயமற்ற வேலைநிறுத்தம்!

### யாழ்.மாநகர முதல்வர் விசனம்



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் தற்போது டெங்கு ஒழிப்புப் பணிகள் இடம்பெறும்நிலையில், நியாயமற்ற கோரிக்கையை முன்வைத்து மாநகர சபை அமர்வு இடம்பெறும் தினத்தில் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார ஊழியர்கள் அறிவித்துள்ளனர் என்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் விசனம் தெரிவித்தார்.

" பிற இடங்களில் இடம்பெறும் கூட்டங்களுக்கெல்லாம் மாநகர சபையின் ஊழியர்கள் தொழிற் சங்கம் சார்பில் தலைவர், செயலர், பொருளாளர் ஆகியோர் செல்லவேண்டும் எனக் கோருகின்றனர்.

அதேபோன்று கடமை நேரம் ஒரு தொழிலாளிக்கு வாராந்தம் 45 மணி நேரம் என்பது சட்டமாகவுள்ளது. ஆனால் அதனை ஏற்க மறுக்கின்றனர்.

இதற்காக தினவரவுப் பதிவேட்டுக்காக கை விரல் அடையாளம் வைக்க மறுக்கின்றனர். இதே போன்று மற்றுமோர் விடயமாக சம்பளம் பெறும் நாளில் 10 மணியுடன் வீடு செல்ல வேண்டும் என்கின்றனர்.

இவ்வாறு சட்டத்துக்கு முரணான கோரிக்கைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? இவ்வாறான பொருத்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து எமது சபை அமர்வுத் தினங்களில் அவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர்.

இது அரசியல் பின்புலத்தில் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது. உண்மையில் சுகாதாரத் தொழில் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முடியாது." என்றார்.

(த-105)

## விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,டிசெ.10

வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக்கள் தென்மராட்சி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. கைதடியில் இடம்பெற்றவிபத்தில் 20வயது இளைஞரும்மீசாலையில் இடம்பெற்ற விபத்தில் 85 வயது முதியவரும் காயமடைந்தனர். இருவரும் சாவகச்சேரிமருத்துவமனையில்சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

(ஜ-9)

## தடையையும் மீறி இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

மாவட்டச் செயலரின் தடை உத்தரவையும் மீறி, தனியார் கல்வி நிலையங்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் குடாநாட்டில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. அதனால் குடாநாட்டில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் உடனடியாக டெங்குப் பரிசோதனை நடத்துமாறு அதிகாரிகளுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கடந்தசனிக்கிழமை அவசர உத்தரவுபிறப்பித்திருந்தார்.

அதற்கமைய எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குக் கல்வி நிலையங்களைத் தற்காலிகமாக மூடுமாறும், அந்த காலஇடைவெளிக்குள் சகல கல்வி நிலையங்களிலும் டெங்குப் பரிசோதனை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. அவ்வாறு சோதனை செய்யப்படும் போது, சட்ட நடவடிக்கைகள் கட்டாயம் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மாவட்டச் செயலரின் உத்தரவையும் மீறி, பல தனியார் கல்வி நிலையங்களில் தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலர்களிடம் கேட்ட போது, மாவட்டச் செயலரின் உத்தரவுக்கமைய தனியார் கல்வி நிலையங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை நடந்த அவசர கலந்துரையாடலின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரப்பரீட்சை எழுதப்போகும் மாணவர்களின் நலன் கருதி, அவர்களுக்கு மாத்திரம் வகுப்புகள் நடைபெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. என்று தெரிவித்துள்ளன.

(க-104)

# “நான் சஹ்ரான் அல்ல!”

## – ரிஷாத் விளாசல்



கொழும்பு, டிசெ. 10

இன்றைய ஆட்சியாளர்கள் பயங்கரவாதி சஹ்ரானால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் எடுத்துரைத்தே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். எங்களை ஆட்சியாளர்கள் இலக்கு வைப்பது தவறானது. நாங்கள் ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் அரசியல் தலைவர்கள். நாம் எந்தவகையிலும் சஹ்ரானைப் போன்றவர்களல்லர் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் ரிஷாத் பதியுதீன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களை ஆட்சியாளர்கள் இலக்கு வைப்பது தவறானது.

வில்பத்து வனத்தை நான் அழித்ததாக என்மீது வீண்பழி சுமத்துகிறார்கள். எனது அதிகாரத்தை முறைகேடுசெய்து வில்பத்து சரணாலயத்தின் எந்தவொரு பகுதியையும் நான் அழிக்கவில்லை. 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முஸ்லிம் அகதிகள் தங்களது சொந்த நிலங்களில் மீளக்குடியேறுவதற்கு 2009ஆம் ஆண்டு வாய்ப்புக்கிடைத்தது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களை அடுத்து தோன்றிய சூழ்நிலைகளில் முஸ்லிம் அமைச்சர்களான நாம் பதவிகளை விட்டு விலகினோம். பொலிஸாரும், இரகசியப் பொலிஸாரும் எனக்கும் அந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் தொடர்பிருக்கிறதா என்று கண்டறிய விசாரணைகளை நடத்தினார்கள். சஹ்ரானுடன் எனக்குத் தொடர்பிருக்கிறது என்று அதிகாரிகள் சந்தேகித்தால் என் மீது விசாரணை நடத்துங்கள் என்று வெளிப்படையாகவே நான் அறிவித்தேன்.

எனக்கெதிராக முறைப்பாடுகளைச் செய்வதற்கு இரகசியப் பொலிஸார் ஒருவார கால அவகாசமும் வழங்கினர். இது சகல ஊடகங்களிலும் வெளிவந்தது. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் தலைமையிலான மூன்று விசாரணைக்குழுக்களை பொலிஸ்மா அதிபர் நியமித்தார். உத்தியோகபூர்வ விசாரணைகள் இறுதியில் உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் பயங்கரவாதிகளுக்கும், எனக்குமிடையில் எந்தத் தொடர்புகளும் இருந்திருக்கவில்லை என்று நிரூபித்தன. இதுபற்றி சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டது.

நானொரு சிறுபான்மையினத்தின் அரசியல் தலைவராக இருக்கின்ற காரணத்தினால்தான் என்னை இலக்குவைத்து இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என்பது எனக்கு மிகுந்த கவலையளிக்கின்றது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒரு விரும்பத்தகாத சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் என்னையும், எனது சமூகத்தையும் பகிரங்கமாக தொல்லைகளுக்கு உள்ளாக்குகின்றார்கள்.

நாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டிவிடுவதற்கே அவர்கள் முயற்சிக்கின்றார்கள் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

நாட்டில் புதிய ஜனாதிபதியொருவர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கும் போது அவர்கள் இவ்வாறு செயற்படுவது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். புதிய ஜனாதிபதிக்கும், அவரது உயர்ந்த அந்தப் பதவிக்கும் அவர்கள் எந்தவொரு மதிப்பையும் கொடுக்கவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். - என்றார். (ம)

# மீண்டும் இனவாதம்

## - சிவமோகன் எம்.பி.

மன்னார்,டிசெ.10



அரசியலில் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனை மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். முத்தையன் கட்டு பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மதிப்பளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஏற்கனவே இருந்த அரசு தமிழர்களுடன் இசைந்து செயற்பட்டது. தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்திகளை அவர்கள் செய்தனர். எமது உரிமைகளை நிலைநிறுத்தி நகர்ந்து கொண்டிருந்தோம். இவை அனைத்தும் இனவாதமாகத் திரிவுபடுத்தப்பட்டு, தமிழர்களுக்குஎதிராகசிங்களவர்கள்திருப்பிவிடப்பட்டுள்ளனர். 1948 ஆம் ஆண்டு இருந்த ஒரு நாட்டு நிலைமையே இன்று மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார். (க-213)

# “ஆக்கியதும் நிறுத்தியதும் சுமந்திரனே!!”

## கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 10



இலங்கையில்இழுவைமடி தடைச் சட்டவரைவைக் கொண்டுவர முயற்சிசெய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரனே, அந்தச் சட்டவரைவு நடைமுறைக்கு வராமல் போனமைக்கும் காரணம். அவரே அந்தச் சட்டவரைவை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று அரசுக்குக் கூறியுள்ளார் என்று வடக்கு மாகாண கடற்றொழி லாளர் இணையத் தலைவர் சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில்இழுவைமடித் தடைச் சட்டம் நடைமுறைக்கு வரவேண்டும். கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரிவந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவர பெரும் பங்காற்றியிருந்தார்.

எனினும், அது நடைமுறைக்கு வரவில்லை. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தின் குருநகர் பகுதியிலேயே அதிக றோலர் படகுகள் உள்ளன. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாநகர சபையில் போட்டியிட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆனல்ட் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கில் ஆனல்ட்டுக்கு குருநகர் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொடுக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உதவிசெய்துள்ளார்.

அப்போது இருந்த கடற்றொழில் அமைச்சரிடம் இந்தச் சட்ட மூலத்தை இப்போதைக்கு நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டாம் என்று சுமந்திரன் கோரியுள்ளார். இதனை குறித்த அந்த அமைச்சர் என்னிடம் தற்போது தெரிவித்துள்ளார். அப்படியானால் சுமந்திரன் எம்மை ஏமாற்றியுள்ளார்.- என்றார். (து-ரி1)

# விபத்தில் இருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 10

பாதுக்க - துன்னான பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இரண்டு மோட்டார் சைக்கிள்கள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கொஸ்கமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் இருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளைபாதுக்க பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ம)



# மின் தாக்கி யானை பலி!

அம்பாறை,டிசெ.10

மின் கம்பம் இடிந்து வீழ்ந்ததால், காட்டு யானை ஒன்று உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் அம்பாறை உஹன பிரதேச செயலர் பிரிவில் சமன் பிரிவேனா அருகில் உள்ள பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

யானை் மின் கம்பத்துடன் மோதியதால் மின்சாரக் கம்பம், மின்சார வயர்கள் அருகில் உள்ள யானைத்தடுப்பு வேலிக்கு மேல் விழுந்திருந்தது.

அதனால் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி யானை உயிரிழந்தது. உயிரிழந்த ஆண் காட்டு யானைக்கு சுமார் முப்பது வயது. அதன் உயரம் எட்டு அடி என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறந்த காட்டு யானை அதிசக்தி வாய்ந்த மின்கம்பத்துடன் மோதீ, அதை உடைத்திருந்தது. அதனால் இலங்கை மின்சார சபையினர் மின்சார இணைப்புகளைத் தற்காலிகமாகத் துண்டித்து இறந்த யானையின் உடலை மீட்க உதவினர். (க)

# கடத்தல் கட்டுக்கதை!

## – எஸ்.பி.திஸநாயக்க கண்டுபிடிப்பு



கொழும்பு, டிசெ. 10

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் விடயம் ஒரு கட்டுக்கதை என்பதற்கான அனைத்து ஆதாரங்களும் அரசுக்குக் கிடைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். அத்தோடு சுவிஸ் தூதரகத்தில் வேலை செய்த இலங்கைப் பெண்ணுக்கு எந்தவொரு தரப்பினராலும் பிரச்சினை ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

'சுவிஸ் தூதரகத்தில் வேலை செய்த இலங்கைப் பெண்ணுக்கு எந்தவொரு தரப்பினராலும் பிரச்சினை ஏற்படவில்லை. அவர் யாராலும் கடத்தப்படவில்லை என்று அரசுக்கு பல சாட்சிகளில் கிடைத்துள்ளன. இது முற்றுமுழுதாக ஒரு நாடகமாகும். அவருக்கு குறித்த தினத்தில், குறித்த நேரத்தில் எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படவில்லை. அந்தப் பெண் அன்றைய தினம் சென்ற இடம், இறங்கிய இடம் உள்ளிட்டவற்றின் ஒளிப்படங்கள், காணொளிகள் என்பன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன. இதுதொடர்பான விசாரணையும் முறையாக இடம் பெறும்' - என்றார். (ம)

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 10

ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை நேற்றும் நீடிக்கப்பட்டிருந்தது.

பதுளை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, மொனராகலை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் ஏற்கனவே மண்சரிவு எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த எச்சரிக்கையே நேற்றும் நீடிக்கப்பட்டது.

சொத்துச் சேதம் உட்பட வீடுகளுக்கான சேதங்களை மதிப்பீடு செய்து, தேசிய காப்புறுதி நிதியத்தின் ஊடாக அவற்றுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்படும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ம)

# அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை

## – அருட்தந்தை சக்திவேல் தகவல்



கொழும்பு, டிசெ. 10

சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை, நாட்டில் உள்ள பல சிறைச்சாலைகளில் 89 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களில் எவரும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என அரசியல் கைதிகளை விடுப்பதற்கு தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை ம.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டதாக இதுவரை அரசு உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவித்தலையும் வெளியிடவில்லை. இந்த நிலையில் சில ஊடகங்கள் எவ்வாறு இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன என எமக்குத் தெரியாது. விடுவிக்கப்பட்டவர்கள் யார் என்பது பற்றியும் எவ்வித தகவல்களும் இல்லை. ஆனால் சிறைச்சாலைகளில் உள்ள 89 அரசியல் கைதிகளில் நான் அறிய எவரும் இதுவரை விடுவிக்கப்படவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# சொய்சாவின் இடம் யாருக்கு?



கொழும்பு, டிசெ. 10

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் நிலவுவதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்கதெரிவித்துள்ளார்.

காலமான ரஞ்சித் டி சொய்சாவின் மறைவை அடுத்தே இவ்வாறு வெற்றிடம் நிலவுவதாக அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். இதற்கமைய இன்றையதினம் இடம்பெறவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தின்போது அது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

அந்தக் கலந்துரையாடலின்போது எட்டப்படும் தீர்மானம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து, காலமான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவுக்கு அடுத்தபடியாக அந்தக் கட்சியின் சார்பில் அதிக வாக்குகளைப் பெற்றவர், வெற்றிடமான உறுப்புரிமைக்காக நியமிக்கப்படவுள்ளார். (ம)

# பதவிகளைப் பகிர்ந்து முன்னேறுவோம்

## ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு, டிசெ. 10

அனைவரும் சமரசத்துடன் செயற்பட்டு இருக்கும் பதவிகளை பகிர்ந்து கொண்டு கட்சியை முன்னோக்கிகொண்டுச்செல்ல வேண்டுமென்பதையே எதிர்பார்க்கின்றோமென நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்ததாவது:

'எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஒருமனதாக சஜித் பிரேமதாசவுக்கு நாம் வழங்கினோம். அந்தவகையில் நாடாளுமன்ற அமர்வின்போதே எதிர்க்கட்சித் தலைவர் அறிவிக்கப்படுவார்.

அதாவது எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டதை அடுத்து இடம்பெறவுள்ள நிகழ்வுகளின் பின்னர் பிற்பகல் அளவில் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்படுவார் என சபாநாயகர் எனக்கு தெரிவித்தார்.


மேலும் நாடாளுமன்றத்தை எதற்காக ஒத்தி வைத்தார்கள் என்று தெரியவில்லை. கோப் குழுவின் அறிக்கையை மறைப்பதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சிலர் கூறுகிறார்கள். ஆனால் ஒரு மாதம் என்பது பெரிய காலமாகும். இதே வேளை தற்போதுள்ள சூழ்நிலையில், அனைவரும் இருக்கும் பதவிகளை பகிர்ந்துகொண்டு ஐக்கிய தேசியக்கட்சியை முன்னோக்கிகொண்டுச்செல்வதே சிறந்ததாகும்' -என்றார். (ம)

# சிறப்புரையும் கலந்துரையாடலும்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள்' என்னும் தலைப்பில் சிறப்பு உரையும், கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நாளை மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. உரையை மக்கள் பணிமனையின் தலைவரும் யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவருமான மௌலவி சுப்யான் நிகழ்த்தவுள்ளார். (ஐ)

# தூக்குத் தண்டனைக்கு தடை உத்தரவு நீடிப்பு



கொழும்பு, டிசெ. 10

இலங்கையில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த தடையுத்தரவை எதிர்வரும் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை நீடித்து உயர் நீதிமன்றம் நேற்றுத்திங்கட்கிழமை உத்தரவிட்டது.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு தீர்மானித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நான்கு பேருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தான் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதியின் குறித்த உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனு மீதான வழக்கின் விசாரணை, மூன்று நீதியரசர்கள் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் ஜூலை மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர், மரண தண்டனையை நிறைவேற்றும் செயற்பாட்டுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பொறுப்புக்கூறலில் இருந்து விரைவில் விலகும் இலங்கை!

## -ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 10
ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமான பொறுப் புக்கூறல் கடப்பாட்டிலிருந்து இலங்கை முழுமையாக விலகிக்கொள்ளும். எதிர் வரும் மார்ச் கூட்டத்தொடரில் அரசின் நிலைப்பாடு முழுமையாக இதுவாகவே காணப்படும் என பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியை 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு உதவி புரிந்த சர்வதேச அமைப்புக்கள், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் விதமாகவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங் கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டது. இந்தப் பிரேரணைகளுக்கு கடந்த அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த மங்கள சமரவீர முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும், நாடாளுமன்றத் துக்கும் அறிவிக்காமல் பொறுப்பு கூறல் விடயத்துக்கு தான்தோன்றித்தனமாக இணக்கம் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை அரசு பொறுப்புக் கூறலை முன்னெடுக்க வேண்டிய தேவை கிடை யாது. ஏனெனில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் சர்வதேசத்தில் எமது நாட்டு இறையாண்மையினைக் காட்டிக் கொடுப்பதாகவே கருதப்படும். எமது நாட்டுக்கு முற்றிலும் மாறுபட்ட விதமா கவே பிரேரணையின் உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன.

பொறுப்பு கூறல் விடயத்துக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வகையில் அழுத்தங்களை சர்வதேச மட்டத்தில் இருந்து பிரயோகித்தாலும் அது பயன ளிக்காது.

நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் இருந்து விலகிக் கொள்ளும் நிலைப்பாட் டிலே அரசு உள்ளது. மனித உரிமை பேரவையில் பிரேரணையினை கொண்டு வந்த அமெரிக்கா பல்வேறு குற்றச்சாட்டுக்களை மனித உரிமை பேர வைக்கு எதிராக முன்வைத்து விலகிக் கொண்டது. பொறுப்புக் கூறல் விடயத் தில் இருந்து அரசு விலகிக் கொள்வதால் சர்வதேச உறவுகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அனைத்து நாடுகளுடனும் நல்லுறவினை தொடர்ந்து பேணுவோம் - என்றார். (ம-22)

---

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28.03.1949
உதிர்வு : 08.12.2011

**அமரர் பண்டிதர் முருகேசு ஆனந்தசிவம்**
(குளோபல் தொலைத்தொடர்பக முன்னாள் உரிமையாளர், கொடிகாமம், எருவன், வரணி)



மலர்வு 08.04.1944
உதிர்வு 26.08.2011

**அமரர் உமையம்மை சிவபாதம்**
(ஓய்வுநிலை மருந்தாளர் - எருவன், வரணி, குரும்பசிட்டி)

**திதி: அபரபக்க சதுர்த்தசி (10.12.2019)**

"மறைந்து போனாலும் - என்றும்
மறந்து போகாத நினைவுகள்

இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

பராசக்தி ஆனந்தசிவம்
குடும்ப உறவுகள்.

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 06 . 1964
இறப்பு 08 . 12 . 2019

**சிவஸ்ரீ முத்துச்சாமிக்குருக்கள் விஜயகாந்தக்குருக்கள்**

யாழ்ப்பாணம், கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் கோயில், யாழ்.வண்ணார்பண்ணை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் கோயில், யாழ்.செட்டியார்தெரு முத்துவிநாயகர் கோயில், முந்நாள் பிரதம குருவும், அராலி கெம்பிதோட்ட பரமேஸ்வர ஞானவைரவர் ஆலய தற்போதைய பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் விஜயகாந்தக் குருக்கள் 08.12.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கிருஜாம்பாள் அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமிக் குருக்கள் - சிவபாக்கியம் அம்மா தம்பதிகளின் ஜேஸ்டபுத்திரரும், காலஞ்சென்றவர்களான குகசாமிக் குருக்கள் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவஸ்ரீ பிரதீபக் குருக்கள், சௌபாக்கியா, சுகன்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனிஸ்டிகா, சற்குணேஸ்வரசர்மா, பிரசன்னவதன சர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹேமமாலினி அரவிந்தக் குருக்கள், முத்து ஜெயந்திநாதக் குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌரிநாதசர்மாவின் சிறிய தந்தையும், ஆராதனா, ஆராத்திகன், அபிஜிதன் ஆகியோரின் தாய்மாமனாரும், சிவஸ்ரீ வல்லபேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சிவரூபக் குருக்கள் ஆகியோரின் சம்பந்தியும், மிருத்வி, ஆருஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அராலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலிதெற்கு பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(CS/29827)(11,17)

**தகவல்: சிவஸ்ரீ விஜயபிரதீபக் குருக்கள் (மகன்)**

**077 454 4920**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 25 . 07 . 1927
மறைவு 10 . 11 . 2019

**அமரர் சின்னையா அமரசிங்கம்**
(ஓய்வு நிலை கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்)

அன்பின் இலக்கணமாய்
ஆண்டவனின் திருவுருவாய்
இல்லத்தின் ஒளி விளக்காய்
ஈகையில் வள்ளலாய்
உள்ளத்தில் உத்தமராய்
ஊக்கத்தில் சிற்றெறும்பாய்
எண்ணத்தில் உயர்ந்தவராய்
ஏற்போருக்கு அமுதசுரபியாய்
வாழ்ந்த எங்கள்
குடும்பத்து குலவிளக்கு மறைந்து
மாதம் ஒன்று ஆனதுவோ
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
ஆறுமா உங்கள் நினைவு.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

சந்தை வீதி,
கொடிகாமம்.

விக்கினேஸ்வரராசா (மகன் - சுவிஸ்)
0041 0527208579/ 0041 796533436
செல்வராணிமலர் (மகள் - இலங்கை) 0094 077128 3069
இராஜேஸ்வரி (மருமகள் - இலங்கை) 0094 0774222591

(AC 430)(04,17)



## மக்கள் குறைகேள் சந்திப்பு

முல்லைத்தீவு,டிசெ.10

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் குறைகேள் சந்திப்பொன்றை வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றுமுன்தினம் நடத்தினார்.

இந்த மக்கள் குறைகேள் சந்திப்பானது முள்ளியவளை மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், உள்ளக வீதிகளின் மறுசீரமைப்பு, வீதிவிளக்கு பொருத்துதல், வடிகாலமைப்புகளைச் சீர்செய்தல், காணி இன்மை உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகள் முன்வைக்கப்பட்டன.

மக்களின் குறைபாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதாக இதன் போது ரவிகரன் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னரசா லோகேஸ்வரன், சமூக ஆர்வலர் தவராசா காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

# மத்திய கிழக்கு நாடுகள் அர்ப்பணிப்புடன் உள்ளன

## கோத்தபாயவிடம் தூதுவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக்கும் தமது நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்று மத்திய கிழக்குத் தூதுவர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்குத் தூதுவர் குழுமத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர்.

புதிய அரசுக்கு மத்திய கிழக்கு நாடுகளின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் கிடைக்கப்பெறும் எனவும், பொருளாதார மற்றும் கலாசார நடவடிக்கைக்காக எதிர்காலத்தில் இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க எதிர்பார்க்கின்றோம் என்றும் தூதுவர்கள் அங்கு தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கைக்கும் தமது நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளை அனைத்துத்துறைகளிலும் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்றும் உறுதியளித்தனர்.

பலஸ்தீன, எகிப்து, குவைத், ஓமான், ஈராக், லிபியா மற்றும் கட்டார் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைக்கான தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## பழைய இடத்திலேயே இயக்குக!

### கால்நடை வைத்திய நிலைய இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.10

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பல வருடங்களாக இயங்கி வந்த கால்நடை வைத்திய நிலையம் நேற்று திங்கட்கிழமையிலிருந்து வலி.தெற்குப் பிரதேசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதேவேளை கால்நடை வைத்தியநிலையத்தைத் தொடர்ந்தும் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் பட்டினத்தில் இயங்கும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை வளாகத்தில் உள்ள கட்டடத்தில் கால்நடை வைத்திய நிலையம் பல வருடங்களாக இயங்கி வந்தது. இதனால் மானிப்பாய், ஆனைக்கோட்டை, சுதுமலை, சாவல்கட்டு ஆகிய கிராமங்களில் வசிக்கும் கால்நடை வளர்ப்போர் பயனடைந்தனர்.

வசதியீனங்கள் மத்தியில் சிறிய கட்டடத்தில் இயங்கி வந்த மேற்படி கால்நடை வைத்திய நிலையம் நேற்று திங்கட்கிழமை முதல் வலி.தெற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் இணுவில் வீதியில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி வாரத்தில் செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் மட்டும் வலி.தென்மேற்குப் பிரதேச வளாகத்தில் முன்பு இயங்கிய இடத்தில் நிலையம் இயங்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கால்நடை வைத்திய நிலையம் தொடர்ந்தும் பழைய இடத்தில் இயங்குவதற்கு பிரதேச சபை ஒரு வருடத்துக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)



### விசேட தேவையுடையோருக்கு

## செட்டிகுளத்தில் சங்கம்

வவுனியா, டிசெ. 10

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில், சிறப்புத் தேவையுடையோருக்கான சங்கம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட சமூக சேவைஅலுவலர்செ.ஸ்ரீநிவாசன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அபிவிருத்தி அலுவலர் திருமதி ஜீவசாந்தி நிகழ்வுகளை ஒருங்கமைத்தார்.

செட்டிகுளத்திலுள்ள 20 கிராம அலுவலகங்களிலிருந்து வருகை தந்த 60க்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் தலைவராக லோகேந்திரராசா, செயலராக றோனால்ட் றேகன், பொருளாளராக திருமதி தயாநிதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு கிராமங்களுக்கென்றும் இணைப்பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிறப்புத்தேவையுடையோரின் பல்வேறுபட்ட சவால்களைத் தீர்ப்பதற்கு இது போன்ற சங்கங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன. ஒருமித்துக் குரல்கொடுப்பதன் மூலம் பலவற்றை இலகுவாக சாதிக்க முடியுமென்றும் இந்தச் சங்கம் வலுமிக்கதாக இயங்கினால் சிறப்புத் தேவையுடையவர்கள் எதிர்காலத்தில் பல்வேறு நன்மைகளைப் பெற முடியும் எனவும் சமூக சேவை அலுவலர் தெரிவித்தார். (து-222)

## விண்ணப்பம் கோரல்

கரவெட்டி கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு, வளவாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி நெறிகள் இசை, நடனம், சித்திரம், நாடகம், வயலின், மிருதங்களம், ஓகன், சிங்களம் முதலான இசை வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைகளைக் கற்பிக்கத் தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாகசுயவிபரக்கோவையை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பல் வேண்டும்.

விவரங்களை "கரவெட்டி கலாசார மத்திய நிலையம்" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கரவெட்டி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ப. இராசமலர் அறிவித்துள்ளார். (க)

## வலி. மேற்கு பாதீடு நிறைவேற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு, 19 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் த. நடனேந்திரன் தலைமையில் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு சபையில் முன் வைக்கப்பட்டது. இந்தப் பாதீடு தொடர்பான சபை அமர்வுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பி னர்கள் வருகை தரவில்லை. பாதீட்டுக்கு எதிராக ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நால்வர் வாக்களித்தனர்.

இந்தநிலையில் 2020 ஆண்டுக்கான பாதீடானது தவிசாளர் உள்ளடங்கலாக 25 உறுப்பினர்களில், 2 உறுப்பினர்கள் சமூகம் கொடுக்காத நிலையில், 19 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. (க-7)

## சிகரெட் கடத்தியவர் கைது

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக்கு சிகரெட் கடத்தியவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துபாயிலிருந்து வந்த இலங்கையரே நேற்றுமுன்தினம் அதிகாலை சுங்கத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் 91 கார்ட்டன் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் பெறுமதி 10 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (து)

## ஒன்றுபட்டால்தான் கிழக்கின் அதிகாரத்தைப் பெறலாம்


கொழும்பு, டிசெ. 10

கிழக்கு மாகாணத்தில் கட்சி வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபடுவதன் மூலமே எதிர்காலத்தில் தமிழர்கள் கிழக்கு முதலமைச்சரையும் நாடாளுமன்ற அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ள முடியுமென்று ஈ.பி.ஆர்.எல்.எப்.சிரேஸ்ட உப தலைவர் இரா.துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தலைமைகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசுடனும் இலங்கை அரசுடனும் பேசுவதற்கான ஒரு களத்தை உருவாக்கவேண்டும்.

கிழக்கு மாகாண தமிழர்கள் உரிமை என்ற அடிப்படையில் கொழும்பு அரசில் எந்தவித அமைச்சுப் பதவியையும் எந்தவித பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் எடுக்கவில்லை.- என்றார். (து)



# புத்தாண்டு ராசிபலன் 2020

## இடப ராசிக்காரர்களே! அதிர்ஷ்டத்தோடு அற்புதம் நிகழுமாம்...!

இடப ராசிக்காரர்களுக்கு 2020ஆம் ஆண்டு அற்புதங்களை நிகழ்த்தப்போகும் ஆண்டாக அமையப்போகிறது. 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பிறக்கும்போதே கிரகங்கள் மிதுனத்தில் ராகு, விருச்சிகத்தில் செவ்வாய், தனுசு லக்னத்தில் கேது, குரு, சூரியன், சனி, புதன், மகரத்தில் சுக்கிரன், கும்பத்தில் சந்திரன் எனக் கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது. இடப ராசிக்குப் புத்தாண்டு அருமையான யோக பலன்களைத் தரப்போகிறது. சுக்கிரன் 9ஆம் இடத்தில் இருக்கும் போது புத்தாண்டு பிறக்கிறது. இரண்டாம் வீட்டில் ராகு, ஏழாம் வீட்டில் செவ்வாய், எட்டாம் வீட்டில் சனி, கேது, குரு, சூரியன், புதன் என ஐந்து கிரகங்கள் கூட்டணி அமைந்துள்ளது. பத்தாம் வீட்டில் சந்திரன் என அமைந்துள்ளன. நல்ல காரியங்கள் நடக்கும். எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்த உங்களுக்கு 2020ஆம் ஆண்டு அற்புதமாக அமையப்போகிறது. உற்சாகமாக இருப்பீர்கள். ஊடகத்துறை, அழகியல் துறையில் உள்ளவர்களுக்கு நல்லது அதிகம் நடைபெறும். புதிய வேலைகள் கிடைக்கும். ஆசைகள் நிறைவேறும். அதிர்ஷ்டம் வேலை செய்யும். குரு எட்டாம் வீட்டில் அமர்ந்து விபரீத ராஜயோகத்தை தருகிறார். இரண்டாம் வீட்டில் உள்ள ராகு மீது குரு பார்வை விழுவதால் பணவரவு அதிகமாக இருக்கும். சனி பார்வை ஆறாம் வீட்டின் மீது விழும் காலத்தில் நோய்கள் தீரும் கடன்கள் அடையும். இந்த ஆண்டு இடப ராசிக்கு அற்புதமாக இருக்கும். வரவேற்க தயாராகுங்கள்.

**குழந்தை பாக்கியம்**

கல்யாணக் கனவுகள் நிறைவேறும். திருமணம் நடைபெறுவதில் இருந்த தடைகள் நீங்கும். வெளிநாட்டு வருமானம் கிடைக்கும். காதல் திருமணம்




செய்பவர்களுக்கு அற்புதமான கால கட்டம். திருமணம் செய்தவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் எத்தனையோ சங்கடங்களைச் சந்தித்து வந்த உங்களுக்கு இது நோய்கள் நிவர்த்தியாகும் காலம். குரு நோய்களைத் தீர்ப்பார். வீட்டுக்குத் தேவையான ஆடம்பார பொருள்கள் வாங்குவீர்கள்.

**சனி, குரு சாதகம்**

அஷ்டமத்து சனி, குரு என இருந்தாலும் நீங்க பயப்பட வேண்டாம். இந்த ஆண்டு பல அற்புத பலன்களை தரப்போகிறது. சனி உங்க யோகாதிபதி. அவர் ஆட்சி பெற்று அமரப்போவது அற்புதமான பலன்களை தரப்போகிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கிடைக்கும். போராட்டங்கள் முடிவுக்கு வரும். வேலையில் இருந்த பிரச்சினைகள் விலகும். சனியின் பார்வையால் பறிபோன வேலைகள் கூட புதிதாக தேடி வரும். மாணவர்களுக்கு படிப்பில் இருந்த மந்தநிலை மாறும். உயர்கல்வி யோகங்கள் தேடி வரும் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கும். பெப்ரவரி மாதத்துக்குப் பிறகு நல்ல மாற்றங்கள் ஏற்படும். படிப்பில் ரொம்ப கவனமாக இருங்கள்.

**யோகமான புத்தாண்டு**

பெண்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். கணவருக்கும் நல்ல வேலை அமையும். கணவன் மனைவி இடையே இருந்த கோப தாபங்களை தவிர்த்து விடுங்கள். குடும்பத்தில் சண்டைகளை பெரிது படுத்தாமல் விட்டு கொடுத்து போங்கள். வீடு கட்டும் யோகம் சிலருக்கு தேடி வருகிறது.

பிள்ளைகள் மீது அக்கறை காட்டுங்கள் விட்டுக் கொடுத்து போகவும். மகிழ்ச்சியும் அதிர்ஷ்டமும் தேடி வரும். அருகில் உள்ள அம்மன் கோவிலுக்கு போய் வெள்ளிக்கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபடுங்கள். நல்லதே நடக்கும்.



# வாழ்வை பிரகாசிக்கச் செய்யும் கார்த்திகை தீபம்

கார்த்திகை தீபம் என்பது பண்டையக் காலம் முதல் இன்று வரை கொண்டாடப்படுகின்ற தமிழர்களின் பாரம்பரிய விழாவாகும். கார்த்திகை தீபம் ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியும், கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்நாளை திருக்கார்த்திகை என்றும் திருக்கார்த்திகை தீபத் திருநாள் என்றும் அழைக்கின்றனர்.

ஒளி வடிவான இறைவனை தீபம் ஏற்றி வழிபடுவது எல்லா மங்கலங்களையும் தந்து வாழ்வைப் பிரகாசிக்கச் செய்யும். வேத புராணங்களும்கூட விளக்கேற்றுவதே மிகச் சிறந்த பலன் தரும் என்கின்றன. எத்தனை எத்தனையோ அரசர்கள், கோயில்களில் தீபம் ஏற்றுவதையே மிகச் சிறந்த திருப்பணியாகச் செய்துள்ளனர்.

தமிழர்கள் கொண்டாடிய'புராதனப் பண்டிகைகளில் ஒன்று திருக்கார்த்திகை. விஷ்ணு, பிரம்மா இருவருக்கும் ஜோதி ஒளிப்பிழம்பாய், சிவன் காட்சியளித்த நாள் கார்த்திகை பௌர்ணமியாகும்.

எல்லா நாளுமே தீபம் ஏற்றி வழிபடுவது உயர்வான பலன் தரும் என்றாலும், கார்த்திகை மாதத்தில் ஆலயங்களில் தீபம் ஏற்றி வைப்பதும், இல்லத்தில் இரு



வேளைகளில் விளக்கேற்றுவதும் எல்லா மங்களங்களையும் தந்து வாழ்வை ஒளிமயமாக்கும். விளக்கினை ஏற்றி வைப்பதோடு இதோ இங்கே தரப்பட்டுள்ள துதியினையும் சொல்லுங்கள். தீப லட்சுமியின் அருளால் உங்கள் வாழ்வில் அஷ்டலட்சுமி கடாட்சம் சேரும்.

கார்த்திகை மாதம் முழுவதும் தினமும் மாலையில் வீடுகளிலும் ஆலயங்களிலும் விளக்கேற்றி வழிபடுவது, அக்கினியின் வாயிலாக ஆண்டவனுக்கு அவிர்பாகம் அளிக்கும் பெரும் யாகத்துக்கு நிகரான பலன் தரக்கூடியது.

தினமும் விளக்கேற்ற இயலாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று தினங்களில் மட்டுமாவது கண்டிப்பாகத் தீபம் ஏற்ற வேண்டும். கார்த்திகை மாதத்தின் தொடக்கத்திலும் முடிவிலுமாக இரு நாள்களில் கார்த்திகை நட்சத்திரம் வருமாயின், இரண்டாவதாக வரும் நாளில் கொண்டாடுவது மரபாகப் பின்பற்றப்படுகிறது.

**சொக்கப்பனை**


கார்த்திகை தீபம் அன்று சொக்கப்பனை எல்லா சிவன்கோவில்களிலும் ஏற்றப்படுகிறது. பனை ஓலையானது பச்சையாக இருந்தாலும் தீப்பற்றக்கூடியது. பனை ஓலைகளை கோபுர வடிவில் செய்து சொக்கப்பனை ஏற்றப்படுகிறது. இது சொக்கர்பனை, சொக்கப்பனை எனவும் அழைக்கப்படுகிறது.

சிவபெருமான் ஜோதிப் பிழம்பாக காட்சியளித்ததை குறிப்பிடும் வகையில் சொக்கப்பனை ஏற்றப்படுகிறது. மனதில் உள்ள இருளாகிய அறியாமை, பொறாமை ஆகியவற்றை ஒளியாகிய ஞானத்தைக் கொண்டு இறைவன் போக்குகின்றார் என்பதே சொக்கப்பனை ஏற்றுவதன் தத்துவமாகும்.

## டோகாவில்
# தலிபான் - அமெ. அமைதிப் பேச்சு!

டோகா, டிசெ. 10

தலிபான் அமைப்புக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அமைதிப் பேச்சு மிக நீண்ட இடைவெளியின் பின்னர் டோகாவில் நேற்று ஆரம்பமானது.



இதுகுறித்து ஏ.என்.ஐ வெளியிட்ட செய்தியில், 'அமெரிக்கா - தலிபான்கள் இடையே கட்டார் தலைநகர் டோகாவில் அமைதிப் பேச்சு நேற்றுத் தொடங்கி உள்ளது. ஆப்கனில் வன்முறையை குறைப்பதே போர் நிறுத்தம் ஏற்பட வழி வகுக்கும் என்பது இந்த பேச்சின் முக்கிய அங்கமாக இருந்தது' என்று கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு அமைதியான தீர்வு காண்பதில், தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் முயற்சிகள் நடந்து வருகின்றன. மேலும், ஆப்கனில் 18 ஆண்டுகளாக நடந்து வரும் போரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டு வந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஆப்கன் அமைதிப் பேச்சு அமெரிக்கா தலைமையில் நடந்தது. இதன் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை தலிபான்கள் தரப்பு ஏற்றுக்கொண்டது.

இந்நிலையில், ஆப்கனில் தீவிரவாதத் தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதற்குத் தலிபான்கள் பொறுப்பேற்றனர்.

இதனைத் தொடர்ந்து தலிபான்களுடனான பேச்சு முறிந்துவிட்டது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் கைதிகள் இடமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் தலிபான்களால் 2016ஆம் ஆண்டு கடத்தப்பட்ட இரண்டு அமெரிக்கப் பேராசிரியர்கள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முயற்சியால் விடுவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்தே தலிபான்களுடன் மீண்டும் பேச்சுக்கு பச்சைக்கொடி காட்டியிருந்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். (ம)

# போர் ஓய்வு

காபூல், டிசெ. 10

அமெரிக்காவுடன் நேற்றையதினம் அமைதிப் பேச்சை ஆரம்பித்துள்ள நிலையில், தற்காலிகப் போர் நிறுத்தத்தை உத்தியோக பூர்வமற்ற முறையில் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கான் அரசுக்கு எதிராகத் தலிபான்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல தசாப்தங்களாக இடம்பெறும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமெரிக்கா தற்போது கடும் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான பேச்சு டோகாவில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் உத்தியோகபூர்வமற்ற போர் நிறுத்தத்துக்கு தலிபான்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)



**பணியாளர் தேவை**

உணவு பரிமாறும் பணிக்கான வெற்றிடங்கள் உள்ளன. அனுபவம் / ஆர்வம் உள்ள ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 40 வயதுக்கு உட்பட்டவராகவும் அண்மையில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். நேரில் வரவும்.

**அச்சதை சைவ உணவகம்,**
**நாகவிகாரை முன்பாக**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(CS/29820) (11,17)

**"புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்"**

எங்கள் ஸ்தாபனத்தின் **60**ம் வருட பூர்த்தியை முன்னிட்டு **10%** தொடக்கம் **50%** வரை கழிவு வழங்கப்படும்.

கதைப்புத்தகங்கள், கொப்பிகள், திருக்குறள், டிக்சனரி, சாட், கிறிஸ்மஸ் மரங்கள், அலங்காரப் பொருட்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

விடுமுறை நாட்களிலும் ஸ்தாபனம் திறக்கப்படும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல.212, 214. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தியில் சுற்றுமதில் கட்டப்பட்ட 10 பரப்புக் காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**075 926 2701**

**தவறவிடப்பட்டது**

தேவராசா புலேந்திரகுமார் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் காப்புறுதி, வரிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் என்பவற்றை யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகம் சந்திக்கும் இடையில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 615 8800, 021 224 0507**

**YAMAHA வழங்கும் புத்தாண்டு பரிசு மழை**

சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/- முதல்
125,000/- வரை

இச்சலுகை
டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம்
இருந்து மட்டுமே




20,000/=
பெறுமதியான
Oppo
AIK
2GB Ram
32GB Mem
ஒன்றை இலவசமாக
பெற்றுக்கொள்ளுங்கள்

ஒன்றை கொள்வனவு செய்து




25,000/=
பெறுமதியான
Oppo A5s
(Finger Print)
ஒன்றை
இலவசமாக
பெற்றுக்
கொள்ளுங்கள்

ஒன்றை கொள்வனவு செய்து

(நிபந்தனைக்குட்பட்டது) தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே

காட்சியறை:
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 554 5843 | 077 662 3824

5 இலவச சேவை
2 வருடம் 30000 KM Warranty
Jacket இலவசம்

**காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்**

union assurance
Trust in your tomorrow, today

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



(920)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 20.12.2019 க்கு முன்னர் tharmalingamk@ualink.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# சீண்டும் வடகொரியா மீண்டும் ஏவுகணை

கொழும்பு, டிசெ. 10
அமெரிக்காவின் கடும் எச்சரிக்கை களையும் மீறி ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது வடகொரியா.



இதையடுத்து வடகொரியாவை கடுமையாக எச்சரித்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், 'இத்தகைய செயற்பாடுகளால் வடகொரியா இருப்பதையும் இழக்கும்' என்று தெரிவித்தார்.

வடகொரியா முக்கியமான ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தியது என்று அந்த நாட்டு அரச ஊடகம் நேற்றுமுன்தினம்செய்தி வெளியிட்டிருந்தது.

இதையடுத்து இந்தச் சோதனையை உறுதிப்படுத்திய அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஏவுகணைச் சோதனை தொடர்பில் தெரிவித்ததாவது:

"வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் விரோதமான வழியில் செயல்பட்டால் அனைத்தையும் இழக்க வேண்டிவரும். வடகொரிய அதிபர் கிம் அமெரிக்காவுடனான உறவை கைவிட விரும்பமாட்டார் என்று நினைக்கிறேன்" -என்றார்.

இதற்குப் பதில் வழங்கியுள்ள வடகொரியா, 'அமெரிக்காவின் எச்சரிக்கைகளுக்குப் பயந்து எமது நடவடிக்கைகளைக் கைவிடப்போவதில்லை.

காத்திரமானதும் இதயசுத்தியுடனானதுமான பேச்சுக்களைத்தான் வடகொரியா விரும்புகின்றது' - என்று தெரிவித்துள்ளது. (ம)

# இராணுவம் மூலம் யேமன் போருக்கு தீர்வு கிடையாது!

## சூடான் பிரதமர் தெரிவிப்பு

சனா, டிசெ. 10
யேமன் போருக்கு இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது என்று சூடான் பிரதமர் அப்துல்லா ஹம்தக் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு ஆசிய நாடான யேமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவூதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

மேலும் ஐக்கிய அமீரக ஆதரவு யேமன் தென்பகுதி பிரிவினைவாதிகள், யேமன் அரசுக்கு எதிராகப் போரிட்டு வந்தனர். யேமனில் ஐந்து ஆண்டுகளாக நடைபெறும் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சூடான் பிரதமர் அப்தால்ல ஹம்தக் தெரிவித்ததாவது: -

'யேமன் போரை குறித்து கூறினால், யேமன் போரை இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது. அது எங்கள் தரப்பிலிருந்து வந்தாலும் சரி உலகின் எந்த தரப்பிலிருந்து வந்தாலும் சரி. அமைதி மற்றும் அரசியல் ரீதியான பேச்சுக்கள் மூலமே தீர்வு காண முடியும்' - என்றார். (ம)





# ஈரானில் இறந்தோர் 1,000 பேர்

## ட்ரம்ப் தகவல்

வொஷிங்டன், டிசெ. 10
ஈரானில் நடந்த போராட்டத்தில் இதுவரையில் சுமார் ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்கா தரப்பில், "ஈரானில் சமீபத்தில் நடந்த வன்முறையில் சுமார் ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம். மேலும் கைது செய்தவர்கள் சித்திரவதைக்குள்ளாகி உள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

ஈரானில் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை கடந்த மாதம் 50 சதவீதம் உயர்த்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்த விலை உயர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஈரான் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக நாடு முழுவதும் கலவரங்கள் வெடித்தன. பலர் கொல்லப்பட்டனர். ஆனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஈரான் அரசு வெளியிடாமல் இருந்து வந்தது. இதற்கிடையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக ஈரான் பாதுகாப்புப் படைகள் நடத்திய தாக்குதலில் 100க்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் என்று ஆம்னெஸ்டி தெரிவித்திருந்தது.

ஆனால், இதற்கு ஈரான் தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்தக் கலவரங்களின் பின்னணியில் அமெரிக்கா உள்ளதாக ஈரான் குற்றம் சுமத்தியது. இந்த நிலையில் ஈரான் போராட்டத்தில் சுமார் ஆயிரம் பேர் வரை இறந்திருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம)



# இன்றைய நாள்

**மேடம்:** எதிரியால்உருவானதொந்தரவை சரி செய்வீர்கள். தொழிலில் கூடுதல் உற்பத்தி, விற்பனை இருக்கும். பண பரிவர்த்தனை சீராகும். ஓய்வு நேரத்தில் இசை பாடலை ரசிப்பதால் மனம் இலகுவாகும்.

**இடபம்:** மனதில் அதிக எதிர்பார்ப்பு உருவாகும். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பிறர் பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க கூடாது.

**மிதுனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். நிலுவை பணம் வசூலர்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள்.

**கடகம்:** மனதில் புதுமையான சிந்தனை உருவாகும். தொழிலில் சில மாற்றம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். ஆதாய பண வரவு கிடைக்கும்.

**சிம்மம்:** பொது விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பண செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கன்னி:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்க வேண்டும். அளவான பண வரவு கிடைக்கும். இளமை கால நண்பரை சந்திப்பீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**துலாம்:** சுற்றுப்புற சூழல் உணர்ந்து செயல்படுவீர்கள். நடப்பவை நல்லதாக அமையும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாய பண வரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** லட்சியம் நிறைவேற முழு மனதுடன் பணி புரிவீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். லாப விகிதம் அதிகரிக்கும். பண கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள்.

**தனுசு:** பேசுவதில் நிதானம் பின் பற்ற வேண்டும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குடும்ப செலவுக்கான பண செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூல தனம் போதும். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்றவும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** நண்பருக்கு உதவி வழங்குவீர்கள். தொழிலில் இருந்த போட்டி குறையும். உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும்.

**மீனம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில் அதிக உழைப்பினால் உற்பத்தி, விற்பனை சீராகும். அதிக பணம் செலவு செய்வதை தவிர்க்கவும்.

## நேர்மைத்...

யாழ்ப்பாணம், டிசெ. 10

இலங்கையில் சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற தெரிவில், யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி இரண்டாம் இடத்தைப் பெற்றுப் பெற்றுள்ளார். அதற்குரிய விருதும் சான்றிதழும் பணிப்பாளரான மருத்துவர் சத்தியமூர்த்திக்கு நேற்றைய நிகழ்வில் வழங்கப்பட்டது.

இது பற்றிய ஆராய்வை நாடு முழுவதும் நடத்திய 'ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்' அமைப்பு, கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் இந்த அறிவிப்பை விடுத்து விருது வழங்கிப் பாராட்டியது.

இந்த ஐவரில் முதலாமிடத்தை மத்துகம புனித மரியாள் கல்லூரி அதிபர் பிரியதர்சினி பெற்றுக்கொண்டார்.

ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் அமைப்பு, நாட்டில் இந்த வருடத்துக்கான நேர்மையான அரச அலுவலரை மதிப்பளிக்கும் 'இன்ரகிறிற்றி ஐக்கன் 2019' விருதுக்கான நபரைத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பத்தைப் பொதுமக்களிடம் வழங்கியிருந்தது. இந்த விருதுக்கு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி உட்பட நூற்றுக்கணக்கானவர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்தியிருந்தது.

இந்த அமைப்பின் சுயாதீனமான நடுவர் குழாம் ஒன்று, தெரிவான நூற்றுக்கணக்கானவர்களிலிருந்து 30 பேரைக் கொண்டதாக இறுதிப் பட்டியல் சுருக்கப்பட்டது. அவர்களில் மருத்துவர் சத்தியமூர்த்தி உட்பட 5 பேர் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

5 பேரின் வரலாறு அதாவது அவர்களுடைய பின்புலம், அவர்கள் என்ன செய்துள்ளனர், அவர்கள் எதிர்கொண்ட தடைகள், அவர்கள் செய்த பணியின் தாக்கம் மற்றும் அவர்களுடைய கனவுகள் ஆகியவை தரவாக்கப்பட்டிருந்தன.

அந்த 5 பேரில் முதலாமிடம் இரண்டாமிடம் என்றவாறு யார் தெரிவுசெய்யப்படுகின்றார்கள் என்பதை பொதுமக்கள் வாக்களிக்க (எஸ்.எம்.எஸ் மூலமாக) விடப்பட்டிருந்தனர்.

அதன்படி யாருக்கு அதிகளவு வாக்குகள் கிடைக்கின்றனவோ அவற்றின் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஐந்து வரையான இடங்களிலுள்ளவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர் என்று 'ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்' தெரிவித்தது.

இரண்டாமிடத்தை யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி பெற்றுப் பாராட்டுக்களையும் விருதையும் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் இடத்தை திருகோணமலை வெருகல்பிரதேச செயலர் குணநாதன் பெற்றுக்கொண்டார். அவருக்கான விருதும் சான்றிதழும் நேற்று வழங்கி பாராட்டி மதிப்பளிக்கப்பட்டார்.

நான்காம் இடத்தை கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளர் பிரபாத் சந்திரகீர்த்தியும் ஐந்தாம் இடத்தை சுங்கப் பிரிவின் மத்திய புலனாய்வுப் பிரிவு உதவி அத்தியட்சகர் ஏ.எம்.ஏ.எஸ்.அமரசிங்க ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். (த்)

## கூட்டமைப்பை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து புளொட் மற்றும் ரெலோ கட்சிகள் விலகி தனி வழியில் செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் அந்தக் கட்சிகளின் முடிவெடுக்கும் பொறுப்பில் இருப்பவர்களுடன் உதயன் பேசினான்.

''கூட்டமைப்பிலிருந்து உடைத்துக் கொண்டு செல்வது எமது நோக்கமல்ல. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பிலேயே நாம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் அவரது வீட்டில் சந்தித்துப் பேச்சு நடத்தினோம்.

'கடந்த காலங்களைப் போன்று ஆசனப் பங்கீட்டு விடயத்தில் இறுதிவரை இழுத்தடித்து எங்களை ஏமாற்றக் கூடாது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் எங்களுக்கு எத்தனை ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை நாம் கோருவோம். எமது நியாயமான கோரிக்கையை தமிழ் அரசுக் கட்சி தட்டிக் கழிக்கக் கூடாது. அவ்வாறு தமிழ் அரசுக் கட்சி செயற்பட்டால், கடந்த காலங்களைப் போன்று நாம் சும்மா இருக்க மாட்டோம். நிச்சயமாக மாற்றுவழியில் நாம் தனித்துப் போட்டியிடுவோம். ஆனால் அதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. நிச்சயமாக எமது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை முழுமையாக இருக்கின்றது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகியன ஓரணியில் ஒற்றுமையுடன் பயணிக்கின்றன. இதற்குள் எந்த விதப் பிளவும் கிடையாது. கூட்டமைப்பை எவராலும் உடைக்க முடியாது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது அடுத்தகட்ட நகர்வு மற்றும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா கொண்டுள்ள கரிசனை உள்ளிட்ட சமகால நிலவரங்கள் தொடர்பில் ஆராயும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது, என்றார். (ஒ.5,22)

## படிச்ச...

பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பில் பேசப்பட்டது. அதற்குப் பதிலளித்த சம்பந்தன், படித்த இளையோருக்கு வாய்ப்பு வழங்கவுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார். அதற்குப் பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவர், யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களைக் கைப்பற்றுவதே கடினம் என்று கூறியுள்ளார். அதற்கு சம்பந்தன், இவ்வாறு பயத்தில் கூறாதீர்கள். நாங்கள் இம்முறை அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றவேண்டும்- என்றார். (ஒ.5)

## ஐ.நா...

கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பொதுச் செயலர் நாயகம் பதவிக்கு முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

'ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை ஐ.நா. பொதுச் சபையின் பொதுச் செயலர் நாயகமாக வருமாறு அழைப்பு வந்திருக்கின்றது' என்று சமூக வலைத்தளங்களில் பரவும் செய்தி குறித்து நேற்று கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க,

ஐ.நா. பொதுச் சபையின் அடுத்த அமர்வில் புதிய பொதுச் செயலர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் முன்மொழியப்படும். இந்த முன்மொழிவு தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தற்போது பரிசீலனை செய்து வருகின்றார். ஐ.நா. பொதுச் செயலர் பதவியை ஏற்க வேண்டும் என்பது அவரது தனிப்பட்ட பார்வையாகும். சர்வதேச அங்கீகாரமும் அதிகாரமும் உள்ள இந்தப் பதவி வாய்ப்பு இலங்கைக்குக் கிடைப்பது பெரும் பாக்கியமாகும்' - என்றார். (ஒ.5,22)

## ரூபா.15 ஆயிரம்...

ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் செயலர் சிறிபால ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

நிர்வாக சேவையில் 2ஆம் மற்றும் 3ஆம் தரங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த ஆலோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். தகவல் திணைக்களத்துக்கு அவர் தெரிவித்துள்ளதாவது:

புதிய அமைச்சர்களுக்குத் தேவையான உத்தியோகபூர்வ வீடு மற்றும் வாகனங்களை வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வமான வீடுகளைக் கையளிப்பதில் வழங்கப்பட்டுள்ள காலத்துக்குள் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மாத்திரமே கையளித்துள்ளார். இதே போன்று முன்னாள் அமைச்சர்களும் இவற்றை உத்தியோகபூர்வமாக கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் அளவில் இவை கையளிக்கப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அமைச்சு மற்றும் அலுவலகங்களுக்காக முடிந்தவரையில் அரச கட்டடங்களை பயன்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பெரும் தொகை நிதியைச் சேமிக்க முடியும்.

ஜனாதிபதி செயலகமும், இது தொடர்பான கோரிக்கையை விடுத்திருக்கின்றது. அரச சேவை செயற்றிறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக அடுத்த மாதத்தில் மாவட்டச் செயலர்களின் மாநாடு நடத்தப்படும். இதற்காக அரச பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் வழங்கப்பட உள்ளது என்றார். (ஒ.5)

## பின்னணியில்...

பெயர் தமிழ் அமைப்புக்கள் இருப்பதாக பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பன்னிப்பிட்டியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச இன்று தேசிய பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளார். தற்போது சில பொய்யான குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படுகின்றன. மறுபுறத்தில், மீண்டும் விடுதலைப் புலிகளை உயிர்ப்பிக்கும் செயற்பாடுகளும் தமிழ் புலம் பெயர் அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக நிதி கூட திரட்டப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாகத்தான் சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் அந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

சுவிஸ் தூதரக அதிகாரி இலங்கைப் பிரஜையாவார். இலங்கைப் பிரஜையொருவருக்கு பாதுகாப்பை வழங்குவது அடிப்படை உரிமையாகும். பாதுகாப்புத் தரப்பினர் நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். இலங்கைப் பிரஜையொருவருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று முறைப்பாடொன்று அளிக்கப்பட்டால், அதுதொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

ஆனால், சுவிஸ் தூதரகம் எமக்கான ஒத்துழைப்பை வழங்கவில்லை. குற்றப்புலனாய்வுத் திணைக்கம்தான் அனைத்து விடயங்களையும் கண்டுபிடித்தது- என்றார். (ஒ.5)

## பயணத் தடை...

வைப் பிறப்பித்து நீதிவான் உத்தரவிட்டார்.

நீதிமன்றில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான், பெண் அதிகாரியை கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி அவர் தாக்குதலுக்கோ அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கோ முகம் கொடுத்துள்ளாரா? என்பது தொடர்பில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

தற்போது அவர் ஏதேனும் மன அழுத்தத்தில் உள்ளாரா? என்பது தொடர்பிலும் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறும் எனத் தெரிவித்த நீதிவான், அதுவரை வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார்.

இதேவேளை, சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்றும் நேற்று முன்தினமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இடம்பெற்றன. வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டார். (ஒ.5,22)


## குறைக்கப்பட்டது...

றைக்கு வரும் வகையில் பால்மாவுக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 40 ரூபாவாலும் 400 கிராம் பால்மாவின் விலை 15 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்துக்கு முன்னர், இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஒரு கிலோகிராம் பால்மாவின் விலை 50 ரூபாவாலும் 400 கிராம் பால்மாவின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டிருந்தன. (ம)

## கூடுகிறது...

பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது. கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் இன்று மாலை 5 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஒ.5,22)





## துடுப்பாட்ட பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்.டிசெ.10
மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்டக் கழக வீரர்களுக்காக நடத்தப்பட்ட சிறோ தர துடுப்பாட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

பயிற்சிகளை வடக்கு மாகாண துடுப்பாட்ட பயிற்றுநர் கங்கதரன், மன்னார் மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் றொசான், வவுனியா மாவட்ட ஜெயக்குமார் துடுப்பாட்ட பயிற்றுநர் நெறிப்படுத்தினர். (23)

# பூப்பந்தாட்டத்தில் காண்டீபன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்



யாழ்ப்பாணம், டிசெ.10
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான தனிநபர் ஆட்டத்தில் ச.காண்டீபன் கிண்ணம் வென்றார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆண்களுக்கான தனிநபர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய ச.காண்டீபனை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி வரதராஜன் மோதினார். இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய ச.காண்டீபன் 21:6, 21:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். (23)

பூப்பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில்

# காண்டீபன், குகதாஸ் இணை மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், டிசெ.10
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் ச.காண்டீபன், நா.குகதாஸ் இணை கிண்ணம் வென்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி விளையாடிய ச.காண்டீபன், நா.குகதாஸ் இணையை எதிர்த்து வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய கமலன், ராஜன் இணை மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய ச.காண்டீபன், நா.குகதாஸ் இணை 21:17, 21:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.10
இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் லீக் ஆட்டங்கள் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேலணை மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்வக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர் மட அணி மோதவுள்ளது. (23)

## சதுரங்க பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.10
நெடுந்தீவின் நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் சிறகுகள் அமையம் விளையாட்டு துறையினரால் இரண்டு நாள் சதுரங்க பயிற்சி முகாம் நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் நெடுந்தீவு மகாவித்தியாலயம், றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை, சீக்கிரியாம்பள்ளம் அ.த.க. பாடசாலை ஆகிய 4 பாடசாலை மாணவர்கள் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

இதன் இறுதி நாள் நிகழ்வில் சதுரங்க விளையாட்டை மாணவர்களிடையே ஊடு கடத்தும் வகையில் பெற்றோருடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது. அமையத்தின் விளையாட்டு பிரிவினரால் தொடர்ச்சியான மாதாந்த சதுரங்க பயிற்சி முகாம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (222-23)



# கூடைப்பந்தாட்டத்தில் பற்றீசியன்ஸ் வாகை



யாழ்ப்பாணம், டிசெ.10
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 71:37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# ஒலிம்பிக், பிபா போட்டிகளில் பங்குபற்ற ரஷ்யாவுக்கு 4 வருட தடை விதித்தது வாடா

2020ஆம் ஆண்டு ஒலிம்பிக், 2022ஆம் ஆண்டு பீபா உலகக் கிண்ணம் உள்ளிட்ட அனைத்து பன்னாட்டு விளையாட்டுக்களிலும் பங்கு கொள்வதற்கு ரஷ்யாவுக்கு 4 வருடத் தடையை வாடா எனப்படும் உலக ஊக்க மருந்து தடுப்பு நிறுவனம் விதித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் லொசேன் நகரில் நடத்த வாடாவின் நிர்வாகக் குழுக் கூட்டத்தின் போதே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த வாடாவின் இந்த முடிவினை நடுவர் மேன் முறையீட்டு நீதிமன்றம் மூலம் மேல் முறையீடு செய்வதற்கு 21நாள் அவகாசமும் ரஷ்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வீரர்களில் ஊக்க மருந்து பாவனை தொடர்பான ஆய்வு தரவுகளை ரஷ்யா மறைத்தமைக்காகவும், போலிச் சான்றிதழ்கள் தயாரித்தமையையும் கருத்திற் கொண்டே ரஷ்யாவுக்கு இவ்வாறு நான்கு ஆண்டுகள் அனைத்து பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ரஷ்யாவுக்கு எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி, 2022ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள பீபா உலகக் கிண்ண கால் பந்தாட்டப் போட்டி உள்ளிட்ட முக்கிய போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் கை நழுவிப் போயுள்ளது.

எனவே டோக்கியோவில் 2020ஆம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் மற்றும் 2022 ஆம் ஆண்டு நடைபெறும் பீபா உலகக் கிண்ண போட்டியிலும் ரஷ்யாவின் கொடி அணிவகுப்பில் இடம்பெறாது. அந்நாட்டின் தேசிய கீதமும் ஒலிக்காது.

இந்தப் போதைப் பொருள் பயன்படுத்தலில் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை என்று நிரூபித்த வீரர்கள் பொதுவான ஒரு கொடியில் விளையாடலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தெற்காசிய கபடிப் போட்டியில் இலங்கை அணிக்கு வெள்ளி

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வந்த 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது.

தெற்காசிய விளையாட்டு விழா வரலாற்றில் இலங்கை ஆண்கள் கபடி அணியானது முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி புதிய வரலாறு படைத்தது.

மறுமுனையில் கபடிப் போட்டியில் பலம்பொருந்திய அணியான இந்தியா இறுதிக்குள் நுழைந்திருந்தது. இவ்விரு அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் மோதியிருந்தன. இதில் இந்திய அணி 28:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தை வெல்ல, இலங்கை அணி வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இதன் மூலம் தெற்காசிய விளையாட்டு விழா வரலாற்றில் முதன் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தியது இலங்கையின் கபடி அணி.

# தொடரை வெல்வதே எமது இலக்கு

## ஹெய்டன் தெரிவிப்பு



2ஆவது ரி-20 போட்டியில் இரண்டு இலக்குகளை வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் சுழற்பந்து வீச்சாளர் ஹெய்டன்வால்ஷ் இந்தியாவுக்கு எதிரான தொடரை வெல்வது தான் எமது இலக்கு என்று தெரிவித்தார்.

இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி-20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெல்வதற்கு அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹெய்டன் வால்ஷ் முக்கிய காரணமாக இருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

முக்கியமான நோக்கமே தொடரை வெல்ல வேண்டும் என்பதுதான். எல்லாமே சரியாக அமைந்து அணிக்கு வெற்றியை தேடிக் கொடுக்க வேண்டும்.

இரண்டாவது போட்டியில் பனியின் தாக்கம் அதிகமாக இருந்ததாக நினைக்கவில்லை. நாங்கள் வலுவான பந்து வீச்சு அணி, ஒருமுறை சிறப்பாக பந்து வீசினால் எதிரணியை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த முடியும் என்பதை தெரிந்திருந்தோம்- என்றார்.

# மெஸ்ஸி 35 ஹட்ரிக் கோல்

லா லிகா கால்பந்து போட்டியில் 35ஆவது முறையாக 'ஹட்ரிக்' கோல் அடித்து மெஸ்ஸி சாதனை படைத்துள்ளார்.

லா லிகா கால்பந்து போட்டி ஸ்பெய்னில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஓர் ஆட்டத்தில் நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய பார்சிலோனா அணி 5:2 என்ற கோல் கணக்கில் ரியல் மாலோர்கோவை தோற்கடித்தது.

இதில் பார்சிலோனா முன்னணி வீரர் லயோனல் மெஸ்சி 'ஹட்ரிக்' கோல் அடித்திருந்தார். இது அவரது 35 ஆவது 'ஹட்ரிக்' ஆகும்.

இதன் மூலம் லா லிகா கால்பந்து வரலாற்றில் அதிக 'ஹட்ரிக்' கோல் அடித்தவர் என்ற சாதனையை மெஸ்ஸி படைத்தார். இந்த சாதனை பட்டியலில் ரியல் மட்ரிட் முன்னாள் வீரர் கிறிஸ்டியானா ரொனல்டோ 34 ஹட்ரிக்குடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.



# இந்த அணிக்கு தலைவராக இருப்பது பெருமையாகவுள்ளது

## பொல்லார்ட் பெருமிதம்



வெற்றி பெறத்தான் இங்கு வந்தேன். ஆனால், எங்கள் அணியின் இளம் வீரர்கள் விளையாடிய தைப் பார்த்தபோது மிகவும் பெருமையாக இருக்கிறது என்று மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் பொல்லார்ட் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

இந்தியா- மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையே 2ஆவது ரி-20 போட்டியில் இந்திய அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றது. முதலாவது போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தா டியி ருந்தனர். எனினும் அந்தப் போட்டியில் அவர்களால் வெற்றி பெற முடியாமல் போனது.

ஆனால், 2ஆவது போட்டியில் இந்திய அணியை 170 ஓட்டங்களுக்குள் சுருட்டி, அந்த இலக்கை 9 பந்துகள் மீதமிருக்கையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் அடைந்தனர்.

இந்த வெற்றி குறித்து பொல்லார்ட் தெரிவிக்கையில்;

2ஆவது ரி-20 போட்டியில் எவ்வாறு துடுப்பெடுத்தாட வேண்டும், பந்துவீச வேண்டும், போட்டியை எவ்வாறு அணுக வேண்டும் என்று ஆலோசித்து களமிறங்கினோமோ அதுபோலவே செயற்பட்டோம். எங்கள் அணியின் வீரர்கள் சிறப்பாக விளையாடி னார்கள். இளம் வீரர்களின் விளையாட்டு எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது.

என்னுடைய கிரிக்கெட் விளையாட்டை தொடர்ந்து அனுபவித்து விளையாடுகிறேன். நான் கிரிக்கெட்டில் கற்றுக்கொண்ட அனைத்தையும் இந்த இளைஞர்களுக்கு கற்றுக்கொடுப்பேன். நாங்கள் தொடர்ந்து இதேபோன்று ஒற்றுமையுடன் இருந்தால் தொடர்ந்து இதுபோன்றுவெற்றிகளைப் பெற முடியும்.

இந்த அணிக்கு தலைவராக இருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. கடவுள் எனக்கு கிரிக்கெட் விளையாடும் அறிவை வழங்கியுள்ளார். நான் இங்கு வரும்போது வெற்றி பெறத்தான் வந்தேன். ஆனால், அணித் தலைவராகிய பின்னர் அந்த வேட்கை எனக்கு அதிகமாக, வலிமையடைந்திருக்கிறது.

ஆனால் இன்னும் சில விடயங்களில் நாங்கள் திருத்திக்கொள்ள வேண்டும். பந்து வீச்சில் அதிகமான அகலப் பந்துகள், முறையற்ற பந்து வீச்சு வீசுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும். மும்பை போட்டியைநாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்- என்றார்.




# எந்த மைதானத்திலும் சிக்ஸர் அடிப்பேன்

## ஷிவம் டுபே கர்ச்சிப்பு

மேற்கிந்தியத்தீவுகள் - இந்தய அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி-20 போட்டியில் அதிரடியாக விளையாடி 30 பந்தில் 54 ஓட்டங்கள் குவித்த ஷிவம் டுபே, எந்த மைதானத்திலும் சிகஸ் அடிக்கும் திறமை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

3ஆவது இடத்தில் களம் இறங்கி துடுப்பாட்டம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது எனக்கு மிகப்பெரியது. எனக்கு கொஞ்சம் நெருக்கடி இருந்தது. ரோகித் சர்மா என்னிடம் வந்து, உன்னுடைய திறமை மீது நம்பிக்கை வைத்து விளையாடு என்றார். இது என்னை நிதானமாக விளையாட உதவியது.

ஒரு சிக்ஸ் அடித்த பின்னர், நான் உத்வேகத்தை பெற்றேன். அதன்பின் என்னுடைய வழக்கமான ஆட்டத்தை விளையாட ஆரம்பித்தேன். எந்தவொரு மைதானத்திலும் சிக்ஸ் அடிக்க முடியும் என்ற எனது திறமை மீது நம்பிக்கை வைத்திருப்பேன். அதுதான் என்னுடைய பலம்.

திருவனந்தபுரம் மைதானம் கொஞ்சம் பெரியதாக இருந்தது என்று நினைக்கிறேன். ஆனால், எந்தவொரு மைதானத்திலும் சிக்ஸ் அடிக்கும் திறமை என்னிடம் உள்ளது. அதுதான் என்னுடைய பலம். எப்போது இந்த எண்ணத்தோடுதான் செல்வேன்.

பிடியெடுப்பை விட்டதுதான் போட்டியின் முக்கியமானது. போட்டியின் ஓர் அங்கம்தான் அது. அவர்களும் சில பிடியெடுப்புக்களை விட்டனர். நாங்கள் நல்ல ஓட்ட எண்ணிக்கையைத்தான் பெற்றிருந்தோம் ஆனால் வாய்ப்பை தவறவிட்டுவிட்டோம். சிறந்த அணி என்பதால் தொடரை வெல்வதற்கான உத்வேகத்துக்குத் திரும்புவோம்- என்றார்.


# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 12 . 1986



இறப்பு 08 . 12 . 2019

## திருமதி காமல் குகதர்சன்

வவுனியா செட்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் இல26, புதுவீதி கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமல் குகதர்சன் கடந்த (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இதயராஜ் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் அன்ரன் செல்வரெட்ணம் (பெரியண்ணை) ஜெயராணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் குகதர்சனின் (மருத்துவ பிரதிநிதி - Sunshine) அன்பு மனைவியும் அஸ்மியா, அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிலானி (லண்டன்), இதயரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மயூரா பிரியதர்சினி, சாளினி (ஆசிரி - ஆய்வுகூடம்), சுதர்சன் (ஜேர்மன்), சர்மினி ஆகியோரின் பாசமிகு அண்ணியும் மோகன்ராஜ் (லண்டன்), சசினி (டென்மார்க்) ஆகியோரின்பாசமிகு மைத்துனியும் சிறோசன் (மருத்துவ பிரதிநிதி - Indoscan Pvt Ltd), போல்நியூமன் (Dealmage), பானுஷா (ஜேர்மன்), திவாகர் (ICL Marketing Pvt Ltd) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (11.12.2019) புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுவீதி, கொய்யாத்தோட்டம் தகவல்: குடும்பத்தினர்.**

**கண் வைத்தியசேவை ஆரம்பம்**

வீனஸ் விசேட வைத்தியசாலையில் நாளை (11.12.2019) புதன்கிழமை காலை 7.30 மணியளவில் கண் சிகிச்சை நிலையம் கண்வைத்திய நிபுணரால் திறந்து வைக்கப்பட்டு கண்வைத்திய சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது. தெரிவுசெய்யப்படும் சில நோயாளர்களுக்கு கண் வைத்திய சேவை வைத்திய நிபுணரால் இலவசமாக வழங்கப்படும் மேலும் தொடர்ந்து வைத்தியசாலை நிர்வாகத்தினரால் குறைந்த கட்டணத்திலான சேவை முற்பதிவின் அடிப்படையில் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு வைத்தியசாலையை நாடவும்.

136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 222 4172, 021 222 8470

**SLAS Open & Limited**

உமாசங்கர்& வளவாளர்கள்
மீட்டல் கருத்தரங்கு தொடர் 07
- பொதுஅறிவு - ஸ்ரீரஜ்வன்
- நுண்ணறிவு - குருபரன்

11.12.2019 புதன்
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL, World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.

NEC கல்வி நிறுவனம்
மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி
076 166 1986, 077 741 7143

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்ப

**வெளிவாரி பட்டப்படிப்பு**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

க.பொ.த உ.த சித்தியடைந்தோர் நேரடியாகவும் ஏனையோர் FIT எனும் அடிப்படைக்கணினிக்கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் பயில முடியும். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.

**CIMA-UK CompEngineering USA**

ICT AL OL Grade 6 to10 Robetics AWS ComTIA CISCO-CCNA JAVA AccountingPack.AutoCAD Shingalam EngToflelELTS

புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்குType course<Name>&sendTo772395895

MCS யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.